தமிழ்நாடு ● மகளிர் மேம்பாட்டு ●

முற்றம்

₹10/- மலர் 15 இதழ் 10 பிப்ரவரி 2014 | மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கான மாத இதழ் | ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை

அழகை
பராமரிக்கும்
இயற்கைப்
பொருட்கள்...

மாற்றம்
தந்த வங்கி
முகவர் பணி...!

சூரியசக்தி
நமது எதிர்காலம்
நம் கையில்

பெண்மையைப்
போற்றுவோம்...

திருமதி மைதிலி க. ராஜேந்திரன், இ.ஆ.ப.,
மேலாண்மை இயக்குநர்,
தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனம்

சுய உதவிக் குழு மகளிர் அனைவருக்கும் உலக மகளிர் தின வாழ்த்துகளை அன்புடன் தெரிவித்துக் கொள்கிறேன். பெண்களை பெருமைப்படுத்தும் வகையில் ஆண்டுதோறும் மகளிர் தினம் கொண்டாடப்படுவது உங்களுக்குத் தெரியும். வெளியுலகையே அறியாமல், அடிமைகளாய் வாழ்ந்த பெண்கள் தங்களுக்கான உரிமையை கேட்டுப் போராட ஒன்றிணைந்த தினம்தான் மார்ச் 8.

‘ஒன்றுபட்டால் உண்டு வாழ்வு – நம்மில் ஒற்றுமை நீங்கிடில் அனைவர்க்கு தாழ்வு’ என்பதற்கேற்ப, சுய உதவிக் குழுக்களாய் ஒன்றிணைந்து, இன்று ஆண்களை விடவும் சிறப்பான தொழில் முனைவோர்களாக பெண்கள் வளர்ச்சி பெற்றுள்ளதற்கு, தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனம் மற்றும் புதுவாழ்வு திட்டம் ஆகியவற்றின் செயல்பாடுகளும் ஒரு காரணமாகும்.

அனைத்துத் துறைகளிலும் பெண்கள் சாதனைகள் படைத்து வரும் நிலை ஒருபுறம், பாலியல் வன்கொடுமை, வரதட்சணை, ஈவ்டீசிவ், அமில தாக்குதல் என்ற கொடுஞ்செயல்களுக்கு ஆளாகும் நிலை மறுபுறம் என பெண் சமூகம் ஏற்றத் தாழ்வுடன் இருக்கிறது. இந்நிலையினை மாற்றவும், பெண்கள் அனைத்து நிலையிலும் முன்னேற்றம் காணவும் தமிழ்நாடு மகளிர் நல மேம்பாட்டு நிறுவனமும், புதுவாழ்வு திட்டமும் என்றும் துணை நிற்கும் என்பதை தெரிவித்துக் கொள்கிறேன்.

பொருளாதார வளர்ச்சியை மட்டும் கருத்தில் கொள்ளாமல் சமூக மேம்பாட்டிற்கும் முக்கியத்துவம் கொடுக்கும் செயல்களில் சுய உதவிக் குழுவினர் ஈடுபட வேண்டும். சுற்றுச்சூழல் பாதுகாப்பு, நல வாழ்வு, விழிப்புணர்வு, கல்வி வளர்ச்சி என பல்வேறு நலத்திட்டங்களுக்கும் நம்முடைய ஆதரவினை வழங்க வேண்டும். ‘சிறு துளி பெரு வெள்ளம்’ என்பது போல் நம்முடைய சிறு சிறு செயல்களும் நாளை நம் சந்ததியினருக்கு பெரும் பலனை அளிக்கும் என்பது உறுதி.

எனவே நான் முன்னரே ஒருமுறை சொன்னதுபோல், அடிக்கடி வந்துபோகும் ஒரு தினம் என்று மகளிர் தினத்தை கருதாமல், பெண்களாகிய நம்முடைய உரிமையை வென்றெடுக்கும் தினமாக, பெண்களின் முன்னேற்றத்திற்கு அடியெடுத்து வைக்கும் தினமாக, பல நிலைகளிலும் அடிமைப்பட்டுக் கிடக்கும் பெண்களுக்கு விடுதலை பெற்றுத் தரும் தினமாக, பாலியல் ரீதியாகவும், பொருளாதார ரீதியாகவும் பாதிக்கப்பட்டிருக்கும் பெண்களுக்கு நிவாரணம் பெற்றுத் தரும் தினமாக இந்த மகளிர் தினத்தை கருதி நாம் கொண்டாடுவோம். அதற்கான செயல்களில் ஈடுபடுவோம் என்ற உறுதிமொழியினை நாம் ஏற்க வேண்டும் என்று கேட்டுக் கொண்டு மீண்டும் ஒருமுறை உங்களுக்கு மகளிர் தின வாழ்த்துகளைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மேலாண்மை இயக்குநர்

பொருளாதார வளர்ச்சியை மட்டும் கருத்தில் கொள்ளாமல் சமூக மேம்பாட்டிற்கும் முக்கியத்துவம் கொடுக்கும் செயல்களில் சுய உதவிக் குழுவினர் ஈடுபட வேண்டும். சுற்றுச்சூழல் பாதுகாப்பு, நல வாழ்வு, விழிப்புணர்வு, கல்வி வளர்ச்சி என பல்வேறு நலத்திட்டங்களுக்கும் நம்முடைய ஆதரவினை வழங்க வேண்டும்.

உடல் ஆரோக்கியம்!

உங்க ஆரோக்கியத்திற்கு பச்சை காய்கறிகள் பங்கு எவ்வளவு முக்கியமோ அது மாதிரி தான் நான் சொல்ல போற தகவலும்.

சர்க்கரை நோயை தவிர்க்க

- 30 வயதும் அதற்கு மேற்பட்டவர்களும் அரசு மருத்துவமனை (அ) ஆரம்ப சுகாதார நிலையங்களில் சர்க்கரை நோய் பரிசோதனை செய்து கொள்ள வேண்டும்
- அதிகமாக காய்கறிகள் மற்றும் பழங்கள் உட்கொள்ள வேண்டும்
- அதிக கொழுப்பு மற்றும் சர்க்கரை உள்ள உணவுகளை தவிர்க்க வேண்டும்
- நாள்தோறும் அரை மணி நேரமாவது நடக்க வேண்டும்
- புகை மற்றும் மது பழக்கத்தை விட்டு விட வேண்டும்
- ஆரம்ப நிலையிலேயே சர்க்கரை நோயை கண்டறிந்து தகுந்த சிகிச்சை எடுத்துக்கொண்டால் கண், சிறுநீரகம், இதயம், நரம்பு பாதம் போன்ற உறுப்புகள் பாதிப்படைவதை தவிர்க்கலாம்

தமிழ்நாடு சுகாதாரத் திட்டம்

ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித்துறை
தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு
முற்றம்
மலர் 15 இதழ் 10 பிப்ரவரி 2014
விலை ரூ. 10/-

கௌரவ ஆசிரியர்
மைதிலி க. ராஜேந்திரன், இ.ஆ.ப.,
மேலாண்மை இயக்குநர்
தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனம்

பதிப்பாளர் மற்றும் ஆசிரியர்
எஸ். சின்னப்பன்
செயலர், முற்றம்

நிர்வாக ஆசிரியர்
டபிள்யூ. சிராஜுன்னிசா
பொது மேலாளர்

ஆசிரியர் குழு
கோ. ராதா
கூடுதல் இயக்குநர்

ம. மனோகர சிங்
கூடுதல் இயக்குநர்

எம். மாதவி
கூடுதல் இயக்குநர்

புது வாழ்வு திட்டம்
ஆர். வி. ஷஜீவனா
கூடுதல் திட்ட இயக்குநர்
மோ. கணேஷ்குமார்
தகவல் தொடர்பு வல்லுநர்

பொறுப்பாசிரியர்
மு. மேகவர்ணம்
மக்கள் தொடர்பு அலுவலர்

முற்றம் உதவியாளர்
ஏ. கண்ணன்

கணக்கர்
சு. சசிகலா

கணினி வடிவமைப்பு
மு. செல்வம்

பிழை திருத்துபவர்
எஸ். எஸ். ரவிச்சந்திரன்

தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி :
ஆசிரியர், 'முற்றம்'
தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனம்,
அன்னை தெரசா மகளிர் வளாகம்,
வள்ளுவர் கோட்டம் நெடுஞ்சாலை
நுங்கம்பாக்கம், சென்னை - 600 034.

தொலைபேசி: 044-2817 3412 / 3413
தொலைநகல்: 044-2817 3409

முற்றம் இதழ் தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தின் ஆதரவுடன் வெளியிடப்படுகிறது

ஆசிரியரிடமிருந்து...

எல்லாம் ஓர் இனம்தான்...

அகில உலக அளவில் அனுசரிக்கப்படும் மகளிர் தினம் ஒவ்வொரு ஆண்டும் மார்ச் 8ஆம் தேதியன்று பெரும் விழாவாகவே ஆங்காங்கே கொண்டாடப்பட்டு வருகிறது. 'ஆண் என்ன... பெண் என்ன... எல்லாம் ஓர் இனம்தான்' என பாடிக்கொண்டிருக்கும் சமுதாயத்தில், பெண்களுக்கு மட்டும் ஒரு தினம் அனுசரிக்கப்படுவதற்கு என்ன அவசியம் என்ற கேள்வி எழுகிறது. இந்த மகளிர் தினம் பெண்களை பெருமைப்படுத்தி பாராட்டுவதற்காகவா? அல்லது பெண்களின் பிரச்சனைகளை சமுதாயத்திற்கு வெளிச்சம் போட்டு காட்டுவதற்காகவா? என்ற கேள்விகளுக்கு பல்வேறு விடைகள் கிடைக்கின்றன.

ஒரு குழந்தை ஆணாகவோ அல்லது பெண்ணாகவோ பிறப்பது என்பது இயற்கை. ஆனால் ஆண்களைப் பற்றியும், பெண்களைப் பற்றியும் பல்வேறு கட்டுக் கதைகளை உருவாக்கி, ஆண்களுக்கென்றும், பெண்களுக்கென்றும் வெவ்வேறு குணாதிசயங்கள் இயற்கையாகவே உள்ளது போன்று சித்தரித்துக் காட்டிக் கொண்டிருக்கும் சூழ்ச்சியை அனைவராலும் புரிந்து கொள்ள முடிவதில்லை. இந்த திட்டமிட்ட சூழ்ச்சி வலையில் சிக்கிக் கொண்டு, ஆணுக்கு எல்லா வகையிலும் தாழ்ந்தவள் என்ற எண்ணத்தில் மன நிறைவோடு வாழ்ந்து வரும் அப்பாவி பெண்களின் அறியாமையை கலைப்பதற்கான நாள்தான் மகளிர் தினம்.

இந்த நாளில் பெண்கள் ஒரு விஷயத்தை முழுமையாகப் புரிந்து கொள்ள வேண்டும். அதாவது, பெண்களைப் பற்றிய இழிவான, தாழ்வான கருத்துகளும் மற்றும் போலியான புகழ்ச்சிகளும் திட்டமிட்டு செயற்கையாக உருவாக்கப்பட்டவைகளே தவிர, இது இயற்கையாக உருவானவைகள் அல்ல என்றும், இயற்கையை மாற்ற முடியாது, ஆனால் செயற்கையாக உருவாக்கப்பட்ட எதையும் மாற்ற முடியும் என்ற நம்பிக்கையால் மட்டுமே ஆண்கள் பெண்களுக்கிடையே உள்ள பாகுபாடுகளை களைய முடியும். அதோடு சமமாக உரிமைகளை அடைய முடியும்.

பெண்கள், சமூக-பொது நிகழ்வுகளில் புறக்கணிக்கப்பட்டு, கல்வி போன்ற சலுகைகள் மறுக்கப்பட்டு, முடிவுகள் எடுப்பதில் பின் தள்ளப்பட்டு, ஆக மொத்தத்தில் அவர்களின் உரிமைகள் படிப்படியாக பறிக்கப்பட்டுவிட்ட காரணத்தினால்தான், இன்று உலகளவில் பெண்கள் வெகுண்டெழுந்து தங்களுக்கு இழைக்கப்படும் அநீதிகளுக்கு எதிராக குரலெழுப்ப தொடங்கி விட்டனர். அதற்கான அடையாளமே மகளிர் தினம். வெறும் கொண்டாட்டமாகவோ, சடங்காகவோ மட்டும் மகளிர் தினம் அமைந்து விடக் கூடாது. அதே வேளையில் பெண்களின் சாதனைகள், திறமைகள், வீட்டையும் நாட்டையும் உருவாக்குவதில் அவர்களின் பங்களிப்பு ஆகியவைகள் எடுத்துக் காட்டப்பட்டு, இந்த தினமானது அனைத்து பெண்களுக்கும் உற்சாகமும் மகிழ்ச்சியும் தரக் கூடிய தினமாக அமைய வேண்டும்.

அர்த்தம் நிறைந்த மகளிர் தினத்தை அனுசரிக்கவும், ஆண்களுக்கு நிகராக அனைத்து உரிமைகளும் பெற்று சுதந்திரமாக வாழவும், அனைத்து பெண்களுக்கும் முற்றம் தனது மகளிர் தின வாழ்த்துகளை தெரிவித்துக் கொள்கிறது.

இப்படிக்கு

(எஸ். சின்னப்பன்)
பதிப்பாளர் மற்றும் ஆசிரியர், முற்றம்

உள்ளே

மாற்றம் தந்த வங்கி முகவர் பணி...! 6

குழுவின் சார்பாகவும் கூட்டமைப்பின் சார்பாகவும் அடிக்கடி வங்கிகளுக்குச் சென்று, பணம் செலுத்துதல், குழு உறுப்பினர்களுக்கு கடன் பெற்றுத் தருதல் போன்ற வேலைகளை செய்தேன்.

+2 தேர்வு: வெற்றிப் பாதைக்கு வழிகாட்டி! 7



சுய உதவிக் குழுக்கள் சிறப்பாக செயல்பட... 17

தமிழ்நாட்டில் சுய உதவிக் குழுக்கள் மாபெரும் வளர்ச்சியடைந்து, பெண்கள் சமுதாயத்தி லும் தவிர்க்க முடியாத சக்திகளாக உருவாகி உள்ளனர் என்பதை யாராலும் மறுக்க இயலாது.

திருவள்ளூர் கலாச்சாரப் போட்டிகள் 21

சுனாமிக்குப் பிந்தைய நிலைத்த வாழ்வாதாரத் திட்டம் 22

மஞ்சளின் மகத்துவம் 14

பெண்மையைப் போற்றுவோம்... 8

அனைத்து மகளிருக்கும்
தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு முற்றத்தின்
மகளிர் தின வாழ்த்துகள்

முற்றம் இதழ் சந்தா விபரம்

ஒரு ஆண்டு சந்தா	– ரூ. 100/–
இரண்டு ஆண்டு சந்தா	– ரூ. 150/–
மூன்று ஆண்டு சந்தா	– ரூ. 250/–
நான்கு ஆண்டு சந்தா	– ரூ. 300/–
ஆயுள் சந்தா	– ரூ. 600/–
புரவலர் கட்டணம்	– ரூ. 15,000/–

சந்தாத் தொகையை 'முற்றம்' என்ற பெயரில் சென்னையில் மாற்றத் தக்க முறையில் வங்கி வரைவோலையாக மட்டுமே அனுப்ப வேண்டும். வங்கி வரைவோலையுடன், சந்தாதாரரின் பெயர், க/பெ. (அ) த/பெ., குழுவின் பெயர், வீட்டு எண், தெரு எண், கிராமத்தின் பெயர், தாலுக்காவின் பெயர், மாவட்டத்தின் பெயர் ஆகியவற்றுடன் அஞ்சல் குறியீட்டு எண்ணையும் (பின்கோடு எண்) தவறாமல் குறிப்பிட்டு அனுப்ப வேண்டும். முற்றம் சந்தாக்களுக்குரிய புத்தகம் அந்தந்த நபருக்கு அனுப்ப வேண்டுமா? அல்லது மொத்தமாக எந்த முகவரிக்கு அனுப்ப வேண்டும் என்பதை தெளிவாகக் கடிதத்தில் குறிப்பிட வேண்டும்.

கவிதை, உடல் நலக் குறிப்புகள், சிறப்புக் கட்டுரைகள், சுய உதவிக் குழுக்கள் சம்பந்தப்பட்ட நிகழ்ச்சிகள் போன்றவற்றை சுய உதவிக் குழு உறுப்பினர்கள் தக்க புகைப்படத்துடன் அனுப்பினால் அவைகளில் தகுதி வாய்ந்தவைகள் முற்றம் இதழில் பிரசுரிக்கப்படும். சுய உதவிக் குழுக்களின் வெற்றிக் கதைகள், குழுவின் செயல்பாடுகள் போன்றவற்றையும் புகைப்படத்துடன் அனுப்பினால் அவைகளும் முற்றம் இதழில் பிரசுரிக்கப்படும். முற்றம் இதழ் குறித்த தங்களின் விமர்சனங்களும் ஆலோசனைகளும் வரவேற்கப்படுகிறது.

பெண்களின் முன்னேற்றத்திற்கு உறுதுணையாக இருக்கும் மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தின் செயல்பாடுகளை வண்ணப்படத்துடன் மாதந்தோறும் வெளியிட்டு வரும் முற்றம் இதழ் எங்களைப் போன்ற பெண்களுக்கு சிறந்த தோழி.

கோகிலா சிவசுப்பிரமணி
வெள்ளை ரோஜா மகளிர் குழு,
பாப்பிரெட்டிப்பட்டி, தருமபுரி மாவட்டம்.

இதுநாள் வரை மகளிர் திட்டம் மற்றும் புதுவாழ்வு திட்டம் ஆகியவற்றின் செய்திகள் மட்டுமே இடம் பெற்றிருந்த முற்றம் இதழில் தற்போது சுனாமி வாழ்வாதாரத் திட்டத்தின் செயல்பாடுகளும் இடம் பெற்றிருப்பது முக்கனிகள் போல் இருக்கின்றது. மேலும் பயனுள்ள செய்திகளை வெளியிட விரும்புகிறோம்.

தங்கம்மாள் செல்லமுத்து,
நேரு மகளிர் முன்னேற்ற சங்கம்,
பொள்ளாச்சி, கோவை மாவட்டம்.

முற்றம் இதழில் சென்ற மாதம் இடம் பெற்ற கட்டுரைகள் அனைத்தும் மிகவும் பயனுள்ளதாக இருந்தன. ஆங்கில வார்த்தைகள், அழகுக் குறிப்புகள், வெற்றிக் கதைகள், கட்டுரைகள் போன்ற அனைத்தும் மிகவும் நன்றாக இருக்கின்றன.

உறுப்பினர்கள்,
திருவள்ளுவர் சுய உதவிக் குழு,
வல்லம், தஞ்சை மாவட்டம்.

கிராம வறுமை ஒழிப்பு சங்கத்தின் வாயிலான மேற்கொள்ளப்படும் செயல்பாடுகளின் காரணமாக கிராமப்புறங்களில் வறுமை நீங்கியுள்ளது என்ற செய்திகளை மிகவும் சிறப்பாக மாதந்தோறும் வெளிப்படுத்தி வரும் முற்றம் இதழ் எங்களுக்கு பல்வேறு வகையிலும் பயனளிக்கும் புத்தகமாகும்.

உறுப்பினர்கள்,
கிராம வறுமை ஒழிப்பு சங்கம்,
நங்கவள்ளி, சேலம் மாவட்டம்.

இப்படிக்கு

மின்னஞ்சல் : wdcmutram@yahoo.com
wdcmutram@gmail.com

www.tamilnadumahalir.org/mutram

தினம் தினம்

உலக நுகர்வோர் உரிமைகள் நாள் (மார்ச் 15)

ஆண்டுதோறும் மார்ச் 15ஆம் தேதி தேசிய நுகர்வோர் உரிமைகள் நாள் (National consumer rights day) கடைப்பிடிக்கப்படுகிறது. அமெரிக்க ஜனாதிபதியாக இருந்த ஜான். எப். கென்னடி, அமெரிக்க பாராளுமன்றத்தில் 1962ஆம் ஆண்டு மார்ச் மாதம் 15ஆம் தேதி நுகர்வோர் பாதுகாப்பு தொடர்பாகவும், நுகர்வோர் உரிமைகள் சட்டம் தொடர்பாகவும் ஆற்றிய உரை, உலக அளவில் ஒரு நாட்டுத் தலைவர் நுகர்வோர் பாதுகாப்புத் தொடர்பாக ஆற்றிய முக்கிய உரையாகக் கணிக்கப்படுகின்றது.

1962ஆம் தேதி இடம்பெற்ற அவ்வுரை உலக அளவில் பெரிய அலைகளைத் தோற்றுவித்தது. அதன் விளைவாக 1962ஆம் ஆண்டு, ஒவ்வொரு வருடமும் மார்ச் மாதம் 15ஆம் தேதியை உலக நுகர்வோர் உரிமைகள் நாள் ஆக பிரகடனப்படுத்தி அறிவிக்கப்பட்டது. அதைத் தொடர்ந்து ஒவ்வொரு வருடமும் மார்ச் மாதம் 15ஆம் தேதி உலக நுகர்வோர் உரிமைகள் நாள் ஆக கடைபிடிக்கப்படுகிறது. இந்நாளில் நுகர்வோரின் உரிமைகள் குறித்த விழிப்புணர்வு குறித்த நிகழ்வுகள் அனைத்துப் பகுதிகளிலும் நடைபெறும். ■

அமெரிக்க பாராளுமன்றத்தில் 1962ஆம் ஆண்டு மார்ச் மாதம் 15ஆம் தேதி நுகர்வோர் பாதுகாப்பு மற்றும் நுகர்வோர் உரிமைகள் சட்டம் தொடர்பாகவும் ஆற்றிய உரை, உலக அளவில் ஒரு நாட்டுத் தலைவர் ஆற்றிய முக்கிய உரையாகக் கணிக்கப்படுகின்றது.



உலக வன நாள் (மார்ச் 21)

ஆண்டுதோறும் மார்ச் 21ஆம் தேதியன்று உலக வனநாள் கடைபிடிக்கப்படுகிறது. இன்று உலகம் சந்திக்கும் பேராபத்தான உலக வெப்பமடைதலை (Global Warming) தவிர்க்க காடுகளின் பரப்பை அதிகரிப்பது நமது இன்றியமையாத கடமையாகும். அதிகரித்து வரும் கரிக்காற்றை உறிஞ்சிக் குடித்து பூமிக்கு உயிர்க்காற்றை கொடுப்பது காடுகள்தான். நம்மிடம் உள்ள காடுகளுக்கு சிறு அழிவும் ஏற்படாமல் காத்து நிற்போம். பிளாஸ்டிக் பொருட்களின் பயன்பட்டை தவிர்த்து சுற்றுச் சூழலைக் காத்திட சாண எரிவாயு பயன்பட்டை அதிகரித்திட உலக வனநாளில் உறுதியேற்போம். ■



உலக காசநோய் தினம் (மார்ச் 24)

டாக்டர் ராபர்ட் கோக் (Robert Koch) என்பவர் மார்ச் 24, 1882ஆம் ஆண்டு, காசநோய்க்கான காரணியை (TB bacillus) பெர்லினில் அறிவித்து அறிவியல் உலகை வியப்பில் ஆழ்த்தினார். 1982ஆம் ஆண்டில் இக்கண்டுபிடிப்பின் நூற்றாண்டு நினைவு நாளில் காச நோய் மற்றும் இருதய நோய்களுக்கெதிரான அனைத்துலக அமைப்பு (International Union Against Tuberculosis and Lung Disease - IUATLD) மார்ச் 24ஆம் நாளை உலக காசநோய் நாளாக அறிவிக்க வேண்டுகோள் விடுத்தது. 1996ஆம் ஆண்டில் இருந்து உலக சுகாதார அமைப்பு (WHO) மார்ச் 24ஆம் நாளை காசநோய் விழிப்புணர்வு நாளாக கடைப்பிடிக்க அறிவித்தது. ■

உலக தண்ணீர் தினம் (மார்ச் 22)

ஐக்கிய நாடுகள் அவையின் வேண்டுகோளுக்கிணங்க 1993ஆம் ஆண்டு முதல் ஆண்டுதோறும் மார்ச் 22ஆம் நாள் உலகெங்கும் உலக தண்ணீர் தினம் அனுசரிக்கப்படுகிறது. மக்கள் தொகை அதிகரித்துக் கொண்டே இருக்க, அவர்களுக்குத் தேவையான குடிநீர் தேவையும் அதிகரிக்கிறது. தேவையைப் பூர்த்தி செய்ய கிடைக்கும் நீரைக் குடிக்கும் நிலைக்கு பல பகுதிகளில் உள்ள மக்கள் தள்ளப்பட்டுள்ளனர். இந்த நிலையில் ஐ.நா. சபையின் வேண்டுகோளுக்கிணங்க ஆண்டுதோறும் மார்ச் 22ந் தேதி உலக தண்ணீர் தினம் சர்வதேச அளவில் கடைபிடிக்கப்பட்டு வருகிறது. நம் வாழ்வில் அனைத்து நடவடிக்கைகளிலும் தண்ணீரை சிக்கனமாகப் பயன்படுத்துவோம். எதிர் வரும் சந்ததியினருக்கு வளமான உலகை தந்திவோம். ■

வங்கி முகவர்களாக சாதனை படைத்து வரும் சுய உதவிக் குழு மகளிர்

திருமதி. ஜூலியட் ஆஷா,
அன்னை வேளாங்கன்னி மகளிர் குழு,
மைலப்புரம், பாப்பாக்குடி, திருநெல்வேலி

மாற்றம் தந்த வங்கி முகவர் பணி...!

குழுவின் சார்பாகவும் கூட்டமைப்பின் சார்பாகவும் அடிக்கடி வங்கிகளுக்குச் சென்று, பணம் செலுத்துதல், குழு உறுப்பினர்களுக் கடன் பெற்றுத் தருதல் போன்ற வேலைகளை செய்தேன். இந்நிலையில் மகளிர் திட்டம் மூலம் என்னை வங்கி முகவர் பணிக்கு தேர்ந்தெடுத்தனர்.

சுய உதவிக் குழு மகளிர் இன்று பல்வேறு துறைகளிலும் தங்களின் முத்திரையைப் பதித்து வருகின்றனர். தொழில் முனைவோர்களாக சாதனைகள் படைத்து வரும் சுய உதவிக் குழு மகளிருக்கு வங்கி முகவர்கள் பயிற்சி வழங்கப்பட்டுள்ளது. பயிற்சி பெற்றவர்கள் இன்று வங்கி முகவர்களாக சிறப்புடன் செயலாற்றி வருகின்றனர்.

வங்கி முகவராக உள்ள ஜூலியட் ஆஷா, முற்றம் வாசகர்களுடன் தனது அனுபவத்தைப் பகிர்ந்து கொள்கிறார். 'நான் திருநெல்வேலி மாவட்டம், பாப்பாக்குடி ஊராட்சி ஒன்றியம், மைலப்புரம் அன்னை வேளாங்கன்னி மகளிர் சுய உதவிக் குழுவின் ஊக்குனராகவும், மைலாப்புரம் ஊராட்சி அளவிலான கூட்டமைப்பின் பொருளாளராகவும் இருக்கிறேன்.

எனது குழு மற்றும் கூட்டமைப்பின் உறுப்பினர்கள் பல்வேறு தொழில்களை மேற்கொண்டு வருவாய் பெற்று வருகின்றனர். நான் 12ஆம் வகுப்பு வரை படித்துள்ளதால், குழுவின் சார்பாகவும் கூட்டமைப்பின் சார்பாகவும் அடிக்கடி வங்கிகளுக்குச் சென்று, பணம் செலுத்துதல், குழு உறுப்பினர்களுக் கடன் பெற்றுத் தருதல் போன்ற வேலைகளை செய்தேன். இந்நிலையில் மகளிர் திட்டம் மூலம் என்னை வங்கி முகவர் பணிக்கு தேர்ந்தெடுத்தனர்.

சென்ட்ரல் பேங்க் ஆப் இந்தியா, முக்கூடல் கிளையில் வங்கி முகவராக எனக்கு பணி செய்ய வாய்ப்பு கிடைத்தது. வங்கி முகவராக எனது பணியினை சிறப்பாக செய்து வருகிறேன். எங்கள் ஊராட்சியில் மகாத்மா காந்தி ஊரக வேலை வாய்ப்பு திட்டப் பணியாளர்களுக்கு வாரந்தோறும் ஊதியத் தொகை, முதியோர் உதவித் தொகை போன்றவற்றை வழங்கும் பணியில் நான் ஈடுபட்டு வருகிறேன். மேலும் வங்கி நடைமுறைகளை அறிந்து கொண்டு, என்னுடைய கிராமத்தில் வசிக்கும் மக்களுக்கு வங்கி மூலம் கிடைக்கும் பயன்களை பெற்றுத் தருவதற்கு தேவையான முயற்சிகளை எங்கள் கூட்டமைப்பின் உதவியுடன் செய்து வருகிறேன்.

திறமை உள்ளவர்களை அடையாளம் கண்டு, அவர்களை ஊக்கப்படுத்துவதில் மகளிர் திட்டத்திற்கு நிகர் வேறு எதுவும் இல்லை என்றே சொல்ல வேண்டும். கூட்டமைப்பு பொருளாளராக என்னுடைய வேலைகளை சிறப்பாக செய்யவும், வங்கி முகவராக வங்கி சம்பந்தப்பட்ட வேலைகளை செய்யவும் எனக்கு துணை புரிந்து வரும் மகளிர் திட்டத் திற்கும், கூட்டமைப்பிற்கும் எனது நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன். ■

தொழில் முனைவோர்களாக சாதனைகள் படைத்து வரும் சுய உதவிக் குழு மகளிருக்கு வங்கி முகவர்கள் பயிற்சி வழங்கப்பட்டுள்ளது. பயிற்சி பெற்ற சுய உதவிக் குழு மகளிர் இன்று வங்கி முகவர்களாக சிறப்புடன் செயலாற்றி வருகின்றனர்.

பாடப்புத்தகங்கள், குறிப்பேடுகள், கையேடுகள் போன்ற வற்றை ஒரே இடத்தில் வைக்கவும். இல்லாவிட்டால் கடைசி நேரத்தில் அவற்றை எங்காவது ஞாபகமறதி யாக வைத்துவிட்டு தேடும் நிலை ஏற்படலாம் என்பதால் கவனமாக இருக்க வேண்டும். தேர்வுக்கு முன்னதாக, படித்த பாடங்களை மீண்டும் படித்து நினைவுபடுத்திக் கொள்ளுங்கள். தேர்வு குறித்து பயம் வேண்டாம்.

தேர்வு தொடங்க ஒரு மணி நேரத்துக்கு முன்னதாகவே தேர்வு நடைபெறும் பள்ளிக்குச் சென்று விடுவது தெரியாத அல்லது கடினமான வினாக்களைப் பார்த்து சோகமாகி விடாதீர்கள். முதலில் நன்கு தெரிந்த விடைகளை எழுதுங்கள். நேரம் வீணாகாது. ஒவ்வொரு வினாவுக்கும் விடை அளிக்க எவ்வளவு நேரம் என்று திட்டமிட்டுக் கொண்டு விடைகளை எழுதவும். சில வினாக்களுக்குப் பதில் தெரிந்தும் நேரம் இல்லாமல் போய், விடை எழுதாமல் விட்டு விட வேண்டிய சூழ்நிலை ஏற்படலாம். சில வினாக்களுக்கு விடை எழுத அதிக நேரத்தைச் சரி செய்து கொள்ள வேண்டும்.

+2 தேர்வு: வெற்றிப் பாதைக்கு வழிகாட்டி!

(சென்ற இதழ் தொடர்ச்சி)

பொன். தனசேகரன்

உங்களுக்கு விடைத்தாள் கொடுக்கப்பட்டதும், பரபரப்பாக உடனே எழுதத் தொடங்கி விடாதீர்கள். வினாத்தாளை முழுமையாக ஒரு பார்வை பார்த்து விட்டு, முதலில் தெரிந்த வினாக்களுக்கு விடை எழுதத் தொடங்குங்கள்.

நல்லது. இதனால், பஸ் தாமதம் போன்ற கடைசி நேர பரபரப்புகளில் சிக்கித் தவிப்பதை தவிர்க்க முடியும். தேர்வுக் கூடத்தில் உங்களிடம் பிட் இருப்பது கண்டுபிடிக்கப்பட்டாலோ அல்லது காப்பி அடிப்பது தெரிந்தாலோ நீங்கள் தேர்வு எழுத அனுமதிக்கப்பட மாட்டீர்கள். எனவே குறுக்கு வழிகள் வேண்டாம். தேர்வு நேரத்தில் ஏதாவது சந்தேகம் ஏற்பட்டால் தேர்வுக்கூடக் கண்காணிப்பாளரிடம் மட்டுமே கேட்க வேண்டும். பக்கத்தில் உள்ள மாணவர்களிடம் கேட்கக் கூடாது.

உங்களுக்கு விடைத்தாள் கொடுக்கப்பட்டதும், பரபரப்பாக உடனே எழுதத் தொடங்கி விடாதீர்கள். வினாத்தாளை முழுமையாக ஒரு பார்வை பார்த்து விட்டு, முதலில் தெரிந்த வினாக்களுக்கு விடை எழுதத் தொடங்குங்கள். வினாக்களுக்கான விடைகளை எழுதி முடித்து விட்டு, பின்னர் தெரியாத வினாக்களுக்கான விடைகளை நினைவுக்குக் கொண்டு வந்து எழுத முயல வேண்டும். தேர்வு நேரம் முடிய சிறிது நேரமே இருக்கிறது என்றால், எழுத வேண்டிய விடைகளை எழுதி முடித்த பிறகு நேரம் இருந்தால், வினா எண்களை சரிபார்ப்பதுடன் எழுதிய விடைகளையும் சரிபார்க்க வேண்டும். ■

கடும் உழைப்பும் தன்னம்பிக்கையும்தான் வெற்றிப் பாதைக்கு வழிகாட்டு. வெற்றிக்குக் குறுக்கு வழிகள் இல்லை. தன்னம்பிக்கையோடு தேர்வு எழுதுங்கள். வெற்றி நிச்சயம்!

- நன்றி: புதிய தலைமுறைக் கல்வி

கல்பனா சாவ்லா

பஞ்சாப்பை பூர்வீகமாகக் கொண்ட அமெரிக்க வாழ் இந்தியரான கல்பனா சாவ்லா, விண்வெளியில் பயணம் செய்த முதல் இந்தியப் பெண் என்ற பெருமையைப் பெற்றவர். 2003ஆம் ஆண்டு ஏழு வீரர்களுடன் STS-107 என்ற கொலம்பியா விண்ணோடத்தில் விண்வெளியில் இருந்து பூமிக்கு திரும்பிக் கொண்டிருந்த பொழுது விண்கலம் வெடித்து உயிரிழந்தார்.

International Women's Day

ஆண் ஆதிக்கம், பெண் சமத்துவமின்னை மற்றும் பணி புரியும் இடத்தில் காணப்படும் நியாய மற்ற செயல்பாடுகள் இவையாவும் பெண்களை தமது உரிமைக்காக அறைகூவலிடவும், தொடர்ந்து நேரிடையாகப் போராடவும் வைத்தன. மேலும் பொருளாதார மேம்பாடு கண்ட பெண்கள் தன்னிறைவுடனும், உரிமைகளை அறிந்து கொண்டவர்களாகவும் போராடத் துவங்கினர்.

“பெண்மையைப் போற்றுவோம்...”

சங்க காலம் தொட்டு தற்காலம் வரை பெண்கள் பல்வேறு துறைகளிலும் தங்களின் முத்திரையைப் பதித்து வருகின்றனர். தமிழ், கலை, இலக்கியம், வீரம், அறிவியல், கல்வி என பல்வேறு தளங்களிலும் சாதனைகளை படைத்து வரும் மகளிருக்கு முன்னோடியாக மகளிரே தங்களை செதுக்கிக் கொள்வதற்குச் சான்றாக பண்டைய மகளிரின் வரலாறு அமைகின்றது. இவற்றை இந்த மகளிர் தினத்தில் நினைவு கூர்வது போற்றுதற்குரிய ஒன்றாகும்.

தமிழ்

அவ்வையார்

சங்க காலத்திலேயே தாய்மொழியாம் தமிழ் மொழிக்கு தொண்டு புரிந்தவர்களில் மகளிர் முதன்மையாய் முழுமையாய் விளங்கியவர் சங்கத் தமிழ் மூதாட்டி அவ்வையார் ஆவார். இவர் சங்க இலக்கிய பாடல்களில் 59 பாடல்கள் பாடியுள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளது. இவரின் பாடல்களில் வீரம், இலக்கியம், நாகரீகம் என பல்வேறு தளங்களிலும் சிறப்புப் பெற்றுள்ளது.

பண்பாடு

ருக்மணி தேவி அருண்டேல்

தன்னுடைய திருமணத்திற்குப் பிறகு பொதுவாழ்க்கைக்கு வந்த ருக்மணி 1923ல் இளைஞர் அமைப்பின் தலைவரானார். 1924ல் தமது 20வது வயதில் உலகச் சுற்றுப் பயணத்தை மேற்கொண்ட போது இந்தியக் கலை பண்பாடு ஆகியவற்றை பரப்பும் முயற்சியில் இவரது உரைகள் அமைந்திருந்தன. இவர் உருவாக்கிய கலாஷேத்ராவில்' நடனம் மட்டுமன்றி இசை, ஓவியம், ஒப்பனை, நாடகம் என்ற பிற

அன்னை தெரசா

அல்பேனியா நாட்டைப் பூர்வீகமாகக் கொண்ட இவர் இந்திய குடியுரிமை பெற்றவர். 1950ஆம் ஆண்டு இந்தியாவின் கொல்கத்தாவில் பிறர் அன்பின் பணியாளர் என்ற கத்தோலிக்க துறவற சபையினை நிறுவினார். நாற்பத்தைந்து வருடங்களுக்கு மேலாக ஏழை எளியோர்களுக்கும், நோய்வாய்ப்பட்டோருக்கும். அனாதைகளுக்கும், இறக்கும் தறுவாயிலிருப்போருக்கும் தொண்டாற்றிய உன்னதமானவர்.

கலைகளும் கற்றுத் தரப்படுகின்றன. அவர் ஏற்றிவைத்த கலைக்கூடம் நாளும் அவரின் புகழ்பாடி நிற்கின்றது.

தலைமைப்பண்பு

கவிக்குயில் சரோஜினி நாயுடு

1879ஆம் ஆண்டு பிப்ரவரி 13ஆம் நாள் பிறந்த சரோஜினி நாயுடு அவர்கள் பெண்கள் முன்னேற்றத்திற்காக மட்டுமன்றி, அவர் 1909ல் நடைபெற்ற மாநாட்டில் உரையாற்றும் போது, விதவைகளுக்கு பாதுகாப்பு வேண்டும் என்றும், பெண்கள் கல்வி கற்று முன்னேற வேண்டும் என்றும் பெண்களை நோக்கி விழித்தெழுக என்றும் முழக்கமிட்டார்.

கவிக்குயில், இந்தியாவின் வானம்பாடி, பாரத கோகிலா என்றெல்லாம் அழைக்கப்பட்ட சரோஜினி நாயுடு அவர்களுக்கு, அலகாபாத் பல்கலைக் கழகம் டாக்டர் பட்டம் வழங்கி சிறப்பித்துள்ளது.

சமூக நலம்

ருக்மணி லட்சுமிபதி

1893ஆம் ஆண்டு டிசம்பர் 6ஆம் நாள் பிறந்த ருக்மணி லட்சுமிபதி சென்னைப் பல்கலைக் கழகத்தில் பட்டம் பெற்ற முதல் பெண் என்ற பெருமைக்குரியவர். சட்டசபைக்கு தேர்தல் மூலம் தேர்ந்தெடுக்கப்பட்ட முதல் பெண்ணும் ஆவார். விடுதலைப் போராட்ட வீராங்கனை, சமூகச் சீர்திருத்தவாதி, மகளிர் முன்னேற்றத்திற்காகப் பாடுபட்டடவர், தீண்டாமை எதிர்ப்பு இயக்கத்தின் முன்னோடி, இப்படி பல பெருமைகளும், பரிணாமங்களையும் ஒருசேரக் கொண்ட ருக்மணி லட்சுமிபதி, தமிழகத்தின் புகழை நிலையாட்டியவர்களுள் குறிப்பிடத்தக்கவராவார்.

பாரம்பரிய இசை

வீணை தனம் அம்மாள்

வீணை தமிழரின் பாரம்பரிய இசை வடிவம், தமிழரின் பழமையான இசைக் கருவியான யாழ் வளர்ச்சியடைந்து, வீணையாக வடிவெடுத்தது. இத்தகைய வீணை இசையை தமிழகம் முழுவதும் பிரபலமாக்கியவர் வீணை தனம் அம்மாள் ஆவார். இசை உலகில் இவர் செய்த மற்றுமொரு புரட்சி வாய்ப்பாட்டையும், வீணை இசையையும் இணைத்து கச்சேரிகள் செய்ததுதான். இது தவிர தமிழ், தெலுங்கு, மலையாளம், கன்னடம், உருது, மராட்டிய மொழிகளில் ஆயிரத்திற்கும் மேற் பட்ட பாடல்களை பாடியுள்ளார். வீணை என்ற கருவிக்கு மதிப்பும் மரியாதையையும் உருவாக்கி தந்த தனம் அம்மாள், தான் வாழும் காலம் வரை இசைக்காகவே வாழ்ந்தவர்.

வீரம்

இராணி வேலுநாச்சியார்

ஆங்கிலேயரை எதிர்த்துப் போராடிய முதல் பெண் வேலு நாச்சியார் தான். சேது நாட்டில் ஆண்களுக்கு நிகராக கல்வியிலும், வீரத்திலும் சிறந்த விளங்கிய வேலு நாச்சியாரைப் பார்த்து நாடே ஆச்சரியப்பட்டது. கணவன் இறந்து விட்டால் உடன்கட்டை ஏற வேண்டும் என்ற வழக்கம் நிலவிய அந்த காலத்தில் கணவனைக் கொன்றவர்களைப் பழிவாங்கியது மட்டுமல்லாது, இழந்த நாட்டை மீட்க எட்டு ஆண்டுகள் போரிட்டு வெற்றி பெற்றவர் வீரத் தமிழச்சி வேலு நாச்சியார்.

நம்பிக்கை

கேப்டன் லட்சுமி

1914ல் பிறந்தவர் கேப்டன் லட்சுமி. இந்திய விடுதலை இயக்கத்தின் மூலம் இந்திய தேசிய இராணுவம் உருவாக்கப்பட்ட சூழலில், 1943ல் இராணுவ அணியின் தலைமைப் பொறுப்பேற்ற நேதாஜி சுபாஷ் சந்திர போஸ், பெண்களும் விடுதலைப் போராட்டத்தில் ஈடுபட வேண்டும் என்று அழைப்பு விடுத்தார். இந்த ராணுவத்தில் இருந்த ஜான்சி ராணி மகளிர் படைப்பிரிவிற்கு கேப்டனாக லட்சுமியை நியமித்தார். சில ஆண்டுகளுக்கு முன்னர் பெங்களூரில் நடைபெற்ற உலக அழகிப் போட்டிக்கு எதிராக ஆயிரக்கணக்கானவர்களைத் திரட்டி போராடியவர். ஜாதி மதம் போன்றவற்றிற்கு எதிராவும் சமூக ஒற்றுமைக்காகவும் நம்பிக்கையுடன் போராடியவர் கேப்டன் லட்சுமி.

மருத்துவம்

டாக்டர் முத்துலட்சுமி ரெட்டி

பெண் விடுதலைக்காக அரும்பணியாற்றியவர்களுள் டாக்டர் முத்துலட்சமி ரெட்டியும் ஒருவர். பெண்குலத்தின் நலன்களுக்காக வரலாற்றுச் சிறப்புமிக்க சீர்திருத்தங்களைச் சட்டமாக்கியவர். இந்திய அரசின் 'பத்மபூஷன்' விருதைச் சேவைக்காகப் பெற்றவர். ஆண்களைப் போல பெண்களும் சமஉரிமை, சம அந்தஸ்து பெற்று வாழ வழிவகை செய்தவர்.

1891ல் புதுக்கோட்டையில் பிறந்த முத்துலட்சுமி ரெட்டி, சென்னை மருத்துவக் கல்லூரியில் பயின்ற பட்டம் பெற்ற முதல் தமிழ்ப் பெண். இவர் சென்னை எழும்பூர் பெண்கள் மற்றும் குழந்தைகள் மருத்துவமனையில் மருத்துவராக பணியாற்றத் துவங்கினார். புற்றுநோயை ஒழிக்க வேண்டும் என்ற உறுதியுடன், புற்றுநோய் ஆராய்ச்சி நிறுவனத்தை துவக்கிட பெரும்பங்காற்றினார். வாழ்க்கை வாழ்வதற்கே என்று கொண்டாடாமல், வாழ்க்கை தொண்டு செய்வதற்கே என்று வாழ்ந்தவர் டாக்டர் முத்துலட்சுமி அம்மையார். இந்தியப் பெண்கள் வரலாற்றில் முத்துலட்சுமி அம்மையாருக்கு என்றும் ஒரு சிறப்பாக இடமுண்டு.

கலை

பாலாமணி அம்மையார்

நாடகங்கள் குறித்த கலை வடிவங்கள் ஆண்கள் கையில்தான் இருந்தன. பெண்களைக் கலைகளின் பார்வையாளர்களாகக் கூட அனுமதிக்காத நிலையை உடைத்தெறிந்து, பதினெட்டாம் நூற்றாண்டில் சில பெண்கள் துணிச்சலுடன் நாடகக் கலையைக் கையிலெடுத்தனர். அவர்களுள் முக்கியமானவர் பாலாமணி அம்மையார் ஆவார்.

தீப்பந்தத்தின் வெளிச்சத்தில் நாடகங்களை நடத்தி வந்த காலத்தில் முதன் முதலாக பெட்ரோமாக்ஸ் லைட் பயன்படுத்தி நாடகங்களை நடத்தி யவர் இவர். தனது நாடகத்தின் மூலம் கிடைத்த வருவாயினைக் கொண்டு பல கோவில்களுக்கு திருப்பணிகள் செய்தவர். நலிந்த கலைஞர்களுக்கு பல்வேறு உதவிகளையும் செய்து வந்தவர்.

சுதந்திரம்

தில்லையாடி வள்ளியம்மை

தேசத் தந்தை காந்தியடிகளுக்கு, இந்திய நாட்டு விடுதலைப் போராட்டத்தில் ஈடுபடத் தூண்டுகோலாக இருந்தது, தென் ஆப்பிரிக்கப் போராட்டமாகும். அப்போராட்டத்தில் காந்தியுடன் கலந்து கொண்டு தீவிரமாக செயல்பட்டு உயிர் நீத்த இளம்பெண் தில்லையாடி வள்ளியம்மை ஆவார். வள்ளியம்மை வாழ்ந்தது குறுகிய காலம் என்றாலும், அவர், தம் வாழ்வாலும் தியாகத்தாலும், இந்திய விடுதலை வரலாற்றிலும், ஆண்டாண்டு காலம் வாழும் சிறப்புப் பெற்று விட்டார்.

தொண்டு

டாக்டர் எஸ். தர்மாம்பாள்

படிப்பு, பதவி, பணம், அந்தஸ்து அவை எதுவும் இல்லாமல் மக்கள் பணியாற்ற மனிதாபிமானம் என்ற ஒரு குணம் போதும் என்று நிரூபித்துக் காட்டியவர் டாக்டர் எஸ். தருமாம்பாள். தனது அறிவுக்கண் திறந்த காலத்தில் இருந்து இறுதிக்காலம் வரை மக்களுக்காக பிரதிபலன் எதிர்பாராமல் உழைத்த தூய தொண்டுள்ளம் கொண்டவர் டாக்டர் எஸ் தர்மாம்பாள் அவர்கள்.

ஒவ்வொரு காலக்கட்டத்திலும் தங்களின் சாதனைப் பயணத்தில் மைல்கல்லாக இருந்து வரும் மகளிர் ஒவ்வொருவரின் வாழ்விலும் தாயாக சகோதரியாக தோழியாக மனைவியாக மகளாக ஒவ்வொரு தருணத்தி லும் தங்களை செதுக்கிக் கொண்டு சமூகத்தின் அச்சாணியாக இருக்கும் மகளிரைப் போற்றுவோம். ■

தமிழ் மூதாட்டி அவ்வையார்

சங்க கால பெண் தமிழ் அறிஞர்களில் முதன்மையானவர். தமிழ் மொழியில் சிறப்பு பெற்ற ஆத்திச்சூடி, கொன்றை வேந்தன், நல்வழி, மூதுரை ஆகிய நூல்களை இயற்றியவர். இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பே தமிழ்நாட்டுப் பெண்கள் ஆண்களுக்கு நிகராக கல்வி, புலமையில் சிறந்தவராக இருந்திருக்கின்றனர் என்பதற்கு அவ்வையார் மிகச் சிறந்த உதாரணம்.

பத்மா வெங்கடேசன்,
மேலாளர், இந்தியன் வங்கி

பெண்களின் முன்னேற்றத்திற்காக வங்கிகள்...

சென்ற இதழில் சாந்தி மற்றும் சரோஜா ஆகியோர், பெண்களின் முன்னேற்றத்திற்கான வங்கியில் பயன் பெற்று இன்று வெற்றி நடைபோடுவதை பற்றி தெரிந்து கொண்டோம். எளியோரின் வளர்ச்சி எல்லையில்லா மகிழ்ச்சி என்பதைக் கருத்தில் கொண்டு வங்கிகள் செயல்படுகின்றன.

தன்னம்பிக்கை என்னும் தளிரை மங்கையர் மனதில் பதியம் போட்ட வங்கிகளில் தனிநபர் பயன் பெற முதலில் ஒரு சேமிப்பு கணக்கு துவங்க வேண்டும். சேமிப்புக் கணக்கு துவங்குவது எப்படி என்பதை பார்ப்போம்.

கணக்கு துவங்க புகைப்படத்துடன் கூடிய ஒரு ஆவணம் அல்லது அடையாள அட்டை தேவை (வாக்காளர் அட்டை, ஓட்டுனர் உரிமம் போன்றவை. வீட்டு முகவரிக்கான அத்தாட்சியாக குடும்ப அட்டை போன்றவை).

சேமிப்புக் கணக்கு துவங்க குறைந்தபட்ச தொகை ரூ. 250/- கொண்டு துவங்கினால் போதுமானது. இலவச ஏ.டி.எம். கார்டும் வழங்கப்படும்.

வங்கி வசதி இல்லாத இடங்கள் மற்றும் கிராமங்களில் கூட வங்கி வணிக தொடர்பாளர்கள் மூலம் அடிப்படை சேமிப்பு கணக்கு துவங்கலாம். கணக்கு துவங்க குறைந்த பட்ச தொகை எதுவும் கிடையாது.

கைரேகை மூலம் செயல்படக் கூடிய ஸ்மார்ட் கார்டுகள் வழங்கப்படும். அதன் மூலம் வங்கிக் கணக்குகளை செயல்படுத்தலாம். பணம் போடுவதற்கும் எடுப்பதற்கும் கட்டணம் எதுவும் கிடையாது. எனவே வங்கியில் பயன் பெற கணக்கு துவங்குவது இன்றியமையாதது.

எனவே முதலில் வங்கியில் சேமிப்பு கணக்கை துவங்குங்கள். உங்கள் வளமான வாழ்விற்கு வழி வகுத்திடுங்கள்.

மேலும் என்ன செய்யலாம் என்று அடுத்த இதழில் பார்க்கலாம். ■

இங்கிலீஷ்ல பேசலாம் ஈஸியா...

2000 ஆங்கில வார்த்தைகள் தெரிந்து கொள்வோம்

பகுதி - 11

அன்பு வாசகர்களே, நாம் தினமும் உபயோகிக்கும் பொருட்கள் ஆங்கிலத்தில் எவ்வாறு அழைக்கப்படுகிறது என்பதை அறிந்து கொள்வோம் வாருங்கள்.

நாளிதழ்	News Paper-நியூஸ் பேப்பர்
பால்	Milk-மில்க்
படுக்கை	Bed-பெட்
தலையணை	Pillow-பில்லோ
போர்வை	Blanket-பிளாங்கெட்
தரை விரிப்பு	Carpet-கார்பெட்
கண்ணாடி	Mirror-மிர்ரர்
சீப்பு	Comb-கோம்ப்
துண்டு	Towel-டவல்
துடைப்பம்	Broom-ப்ரூம்

புளி சாதம்	Tamarind Rice-டாமரிண்ட் ரைஸ்
எலுமிச்சை சாதம்	Lemon Rice-லெமன் ரைஸ்
தயிர் சாதம்	Curd Rice-கர்ட் ரைஸ்
தக்காளி சாதம்	Tomato Rice-டொமேட்டோ ரைஸ்
தேங்காய் சாதம்	Coconut Rice-கோக்கநட் ரைஸ்
கத்தரிக்காய் சாதம்	Brinjal Rice-பிரின்ஞ்சால் ரைஸ்
காய்கறி சாதம்	Vegetable Rice-வெஜிடபிள் ரைஸ்
காலை உணவு	Breakfast-பிரேக்பாஸ்ட்
மதிய உணவு	Lunch-லன்ச்
இரவு உணவு	Dinner-டின்னர்

(தொடரும்)

மலையரசி மகளிர் குழு சிறப்பாக செயல்படுகிறது.

மகளிர் திட்டம் தந்த

மகிழ்ச்சியான வாழ்வு!

மலை மாவட்டமான நீலகிரியில் மகளிர் சுய உதவிக் குழுக்கள் சிறப்பாக செயல்பட்டு வருகின்றன. அக்குழுக்களில் உள்ள மகளிர் பல்வேறு பயிற்சிகளைப் பெற்று, சுய தொழில் முனைவோர்களாக வெற்றி நடைபோட்டு வருகின்றனர். அம்மாவட்டத்தில் சிறப்பாக செயல்படும் குழுக்களில் மலையரசி மகளிர் சுய உதவிக் குழுவும் ஒன்றாகும். இக்குழுவின் தலைவியான ராணியுடன் ஒரு நேர்காணல்.

உதகை மகளிர் திட்டத்தைச் சேர்ந்தவங்க என்னிடம் வந்து, சுய உதவிக் குழுவைப் பற்றி பல விபரங்களை சொன்னார்கள். ஆரம்பத்துல நாங்க 10 பேர் சேர்ந்து மலையரசி மகளிர் குழுவை ஆரம்பிச்சோம். இப்ப 12 பேர் உறுப்பினர்களாக இருக்காங்க.

தொழில் பயிற்சிகள் கொடுத்தாங்களா?

மகளிர் திட்டம் மூலமாக எங்களுக்கு உல்லன் ஆடைகள் தயாரிப்பு, ஊறுகாய் தயாரித்தல், தையல் தொழில் ஆகியவற்றுல பயிற்சிகள் கொடுத்தாங்க. பயிற்சிக்குப் பின்னர் தொழில் தொடங்க ஊக்கம் கொடுத்ததோட வங்கிக் கடன் பெறவும் வாய்ப்பு ஏற்படுத்தித் தந்தாங்க.

தற்போது உங்க குழுவின் செயல்பாடுகள் எப்படி இருக்கு?

ஆரம்பத்துல கூலிக்கு யூக்கலிப்டஸ் தைலம் காய்ச்சிக் கொடுத்து வருமானம் பெற்று வந்தோம். படிப்படியா முன்னேறி இப்ப 150 வகையான பொருட்கள தயாரிக்கிறோம். 25 வகையான வீட்டு தயாரிப்பு சாக்லெட்டுகளும், 65 வகையான எசன்ஸ்சு பொருட்களும் தயாரிச்சு விற்பனை செய்கிறோம். கூந்தல் தைலங்கள், அழகு சாதனப் பொருட்கள், மூலிகை தைலம், தேன் மெழுகு போன்ற பொருட்களை தயாரிச்சு விற்பனை செய்கிறோம்.

உங்க பொருட்களோட விற்பனை எப்படி இருக்கு?

நாங்க தயாரிக்கிற பொருட்கள் தரமாகவும், நியாயமான விலையிலும் இருப்பதால நிறைய பேர் எங்க பொருட்கள விரும்பி வாங்குகிறார்கள். போட்டி தயாரிப்பாளர்கள் யாரும் இல்லாததால எங்க பொருட்கள் நன்றாக விற்பனை ஆகின்றன. கேரளா, கர்நாடகா, மத்திய பிரதேசம், டெல்லி ஆகிய மாநிலங்களிலும் எங்க பொருட்கள் விற்பனை செய்யப்படுகிறதுது. மகளிர் திட்டம் மூலமா நடைபெறுகிற விற்பனைக் கண்காட்சிகளில் அரங்குகள் அமைத்து விற்பனை செய்யறோம். வெளிநாடுகளுக்கும் ஏற்றுமதி செய்ய முயற்சிகள் எடுத்துட்டு இருக்கிறோம்.

சுய உதவிக் குழுவில இணைஞ்ச பின் உங்க வாழ்க்கை முன்னேறி இருக்கா?

சுய உதவிக் குழுவில் சேருவதற்கு முன்னாடி நாங்க வறுமையின் பிடியில் சிக்கி இருந்தோம். இப்ப ஒவ்வொரு உறுப்பினரும் மாதந்தோறும் நிறைவான வருவாய் பெற்று ரொம்ப மகிழ்ச்சியாக இருக்கிறோம். ■

திருமதி. ராணி, தலைவி,
மலையரசி மகளிர் சுய உதவிக் குழு,
வண்டிச்சோலை, நீலகிரி மாவட்டம். செல்போன்: 96556 69600

எம். எஸ். சுப்புலட்சுமி

உலக அளவில் புகழ் பெற்ற கருநாடக இசைப் பாடகரான இவருக்கு, நாட்டின் மிக உயர்ந்த விருதான பாரத ரத்னா விருது வழங்கப்பட்டுள்ளது. தமிழ், கன்னடம், மலையாளம், தெலுங்கு, வங்காளம், இந்தி, சமஸ்கிருதம், குஜராத்தி ஆகிய பல மொழிகளில் இவர் பாடல்களை பாடியுள்ள இவர் ஐக்கிய நாடுகள் சபையில் பாடிய பெருமை பெற்றவர்.

மஞ்சளின் மகத்துவம்

நம் முன்னோர்கள் சமையலில் பயன்படுத்திய பல இயற்கைப் பொருட்களில் மருத்துவ குணங்கள் நிறைந்திருக்கின்றன. சமையலில் அன்றாடம் நாம் பயன்படுத்தும் மஞ்சள் தூளில் மருத்துவ குணங்கள் நிறைந்துள்ளன. பொதுவாக மஞ்சள் நிறம் ஏற்படவும், உணவுப் பதார்த்தங்கள் நிறமாக இருக்கவுமே மஞ்சள் பயன்படுத்தப்படுவதாக பலரும் அறிவோம். ஆனால் அவற்றின் செயல்பாடு மிகவும் ஆச்சரியப்பட வைக்கும். மசாலப் பொருட்களில் மஞ்சள் நிறத்தைக் கொண்டு வருவதற்கு மஞ்சள் தூள் பயன்படுத்தப்படுகிறது. 'அல்ஜைமர் நோய்' உடையவர்களுக்கு மூளையில் இருக்கும் அழுக்குகளை நீக்குவதில் மஞ்சள் தூள் பெரும் பங்காற்றுகிறது. மஞ்சள் தூளில் இருக்கும் 'குர்குமின்' என்ற பொருள் இதற்கு உதவுவதாக ஆராய்ச்சியாளர்கள் தெரிவிக்கின்றனர். இந்திய மருத்துவத்தில் வெகுகாலமாக பயன்படுத்தப்படும் மஞ்சள் தூளானது புற்றுநோய்க்கும், மல்டிபிள் செலெரோஸிஸ், சிஸ்டிக் பைபரோஸிஸ் போன்ற வியாதிகளுக்கும் அருமருந்தாக செயலாற்றி வருகிறது.

மஞ்சளில் உள்ள குர்குமின், ஒரு ஆன்டி ஆக்ஸிடெண்டும், ஆன்டி இன்ஃப்ளமேட்டரி எனப்படும் எரிச்சல் குறைக்கும் மருந்தும் ஆகும். இது மூளையில் அமைலோய்ட் சேர்வதினால் உருவாகும் எரிச்சலையும், அதனால் உருவாகும் செல் உடைதல்களையும் சரிப்படுத்துகிறது. முடக்குவாதம் மற்றும் இதயத்தில் ஏற்படும் பாதிப்புகளையும் குர்குமின் தடுக்கிறது என்று ஆராய்ச்சியாளர்கள் தெரிவிக்கின்றனர். ■

தனியா புதினா இனிப்பு உருண்டை

தேவையான பொருட்கள்

தனியா - 50 கிராம், புதினா - 1 கட்டு, காய்ந்த திராட்சை - 50 கிராம், பூசணி விதை, வெள்ளரி விதை - தலா 1 டீஸ்பூன், பனை வெல்லம் - 100 கிராம், சுக்கு - 1 துண்டு, ஏலக்காய் - 4, மஞ்சள் தூள் தேவையான அளவு.

செய்முறை

புதினாவை நன்றாக சுத்தம் செய்து, பொடியாக நறுக்கி, அதனுடன் மஞ்சள் தூள் சேர்த்து கடாயில் போட்டு எண்ணெய் விடாமல் வதக்கி தனியாக வைக்கவும். பிறகு தனியாவையும் அதேபோல் வெறும் கடாயில் வறுத்து வைத்துக் கொள்ளவும். பூசணி விதை, வெள்ளரி விதை, சுக்கு, ஏலக்காய் ஆகியவற்றை ஒரு கடாயில் போட்டு நன்கு வறுத்து பொடியாக்கிக் கொள்ளவும். எல்லாவற்றையும் ஒன்றாகக் கலந்து ஒரு கடாயில் போட்டு, அதனுடன் காய்ந்த திராட்சை சேர்த்து, பனை வெல்லத்தை பொடித்துப் போட்டு நன்கு கிளறவும். சூடாக இருக்கும் போதே சிறு சிறு உருண்டைகளாகப் பிடித்து வைக்கவும்.

பருவ வயது பிள்ளைகள் இந்த தனியா புதினா இனிப்பு உருண்டையை சாப்பிடுவதால் முகத்தில் பருக்கள் வராமல் காப்பதுடன், ரத்தம் சுத்தமாகி, சருமம் சம்பந்தப்பட்ட பிரச்சனைகளும் அண்டாது. ■

இந்திய மருத்துவத்தில் வெகுகாலமாக பயன்படுத்தப்படும் மஞ்சள் தூளானது புற்றுநோய்க்கும், மல்டிபிள் செலெரோஸிஸ், சிஸ்டிக் பைபரோஸிஸ் போன்ற வியாதிகளுக்கும் அருமருந்தாக செயலாற்றி வருகிறது.

எண்ணெய் குளியலால் என்ன நன்மை?



எண்ணெய் குளியல் உடலுக்கு பல நன்மைகளைக் கொடுக்கக் கூடியது. நமது சருமம் மற்றும் கூந்தலுக்கு எண்ணெய் சத்தானது அவசியம். இயல்பாகவே இவை இரண்டிலும் கொழுப்பும் எண்ணெய் சுரப்பும் மிதமான அளவில் இருக்கும். நம் சருமம் மற்றும் கூந்தலுக்கு கவசமாக இருக்கும் இவைகளைத் தக்க வைத்துக் கொள்ள எண்ணெய் குளியல் அவசியம். எண்ணெய் குளியலால் மேலோட்டமான அழுக்கு மட்டும் நீங்காமல், சருமத்தின் ஆழத்தில் படிந்துள்ள அழுக்கும், இறந்த செல்களும் நீக்கப்படும். மேலும் கண் எரிச்சல் நீங்கி, உடல் புத்துணர்வு பெறும். நல்ல தூக்கம் வரும். சருமம் பொலிவு மாறும்.

பயனுள்ள குறிப்புகள்...

இயற்கைப் பொருட்கள் தரும் அழகிய தோற்றம்

அழகை பராமரிக்கும் இயற்கைப் பொருட்கள்...

கோடை காலம் வந்தாலே வெயிலின் தாக்கம் அதிகமாக இருக்கும். உச்சி முதல் உள்ளங்கால் வரை பல்வேறு பாதிப்புகள் இந்த சமயத்தில் ஏற்படும். நாம் அன்றாடம் பயன்படுத்தும் இயற்கைப் பொருட்களைக் கொண்டே கோடையிலும் நம் அழகை பராமரிக்கலாம்.

சருமம் பொலிவு பெற...

கொஞ்சம் வெயில்பட்டாலே சருமம் கருத்துப் போவதும், எண்ணெய் வடிவதும் கோடையில் அதிகமாக இருக்கும். வெள்ளரிக்காய் சாறும், தேங்காய்ப் பாலும் பயன்படுத்தி சருமப் பிரச்சனைக்கு தீர்வு காணலாம். தேங்காய் பால், வெள்ளரிக்காய் சாறு இரண்டையும் சம அளவு எடுத்து கலக்கி, அதில் பஞ்சை நனைத்து முகம் முழுக்க ஒற்றியெடுத்து, பத்து நிமிடங்கள் கழித்து முகத்தை கழுவி வந்தால் வெயிலால் கருத்த முகம் பொலிவடையும்.

தக்காளியை தோல் நீக்கி சதைப்பகுதியை எடுத்து அத்துடன் தயிர் கலந்து முகம் கழுத்து போன்ற பகுதிகளில் தடவி, அரை மணி நேரம் கழித்து கழுவினால் தோலில் ஏற்பட்டுள்ள கருமை மறையும்.

கோடை காலத்தில் வெதுவெதுப்பான தண்ணீரில் குளித்து வந்தால், சருமம் வறட்சியடையாது.

வாழைப்பழத்தை மசித்து பப்பாளிக் கூழுடன் சேர்த்து முகத்தில் தடவி, சிறிது நேரம் கழித்து முகத்தை கழுவும் போது, இறந்த செல்கள் அகன்று முகம் பளபளக்கும். ஆரஞ்சுப் பழச் சாறுடன் தேன் கலந்து சருமத்தில் தடவினால் கருத்த சருமம் மெல்ல மெல்ல நிறம் மாறும்.

சுத்தமான சந்தனத்தில் பன்னீர் கலந்து முகம், கழுத்து பகுதிகளில் தடவி சிறிது நேரம் ஊறிய பின்னர் கழுவினால், கருத்த சருமத்தின் நிறம் மாறுவதுடன், குளிர்ச்சியாகவும் இருக்கும். மூல்தானி மட்டியில் பன்னீர் கலந்து தடவினால் சருமத்தில் எண்ணெய் பசை உருவாவது கட்டுப்படும்.

அதிக எண்ணெய் மற்றும் கொழுப்பு நிறைந்த உணவுகளை தவிர்க்க வேண்டும். கீரைகள், நீர் சத்து நிறைந்த காய்கறிகள் போன்றவற்றை சாப்பிட வேண்டும். இளநீர், மோர் போன்றவற்றை அடிக்கடி சாப்பிடுவதும் சருமத்தின் பொலிவை அதிகரிக்கும். ■

இயற்கைப் பொருட்களால் கிடைக்கும் நன்மைகள்!



மாதுளம் பூ

மாதுளம் பழத்தில் இருக்கும் வைட்டமின்கள், தாது சத்துக்கள் அனைத்தும் மாதுளம் பூவிலும் உள்ளன. பல்வேறு உடல் நலக் குறைபாடுகளுக்கு மாதுளம் பூ சிறந்த நிவாரணம் அளிக்கிறது. உலர்ந்த மாதுளை மொக்குகளை இடித்து தூள் செய்து வைத்துக் கொண்டு, கடுமையான இருமல் ஏற்படும் சமயங்களில் இந்தத் தூளினை ஒரு சிட்டிகை சாப்பிட்டு, தண்ணீர் குடித்தால் உடனே இருமல் குணமாகும். ■

இஞ்சி

இஞ்சியை தினமும் உணவில் சேர்த்துக் கொண்டால் எப்போதும் புத்துணர்ச்சியுடன் இருக்கலாம். காலையில் எழுந்தவுடன் இஞ்சி டீ குடிப்பது நல்லது. குறிப்பாக கர்ப்ப காலத்தில் கர்ப்பிணிகளுக்கு காலை வேளையில் ஏற்படும் மசக்கையை தடுக்க இஞ்சி டீ அவசியமான பானம். இஞ்சியை சிறு துண்டுகளாக வெட்டி மென்று சாப்பிட்டால் நெஞ்செரிச்சல், அஜீரணம் போன்றவை தீரும். ■

டாக்டர். முத்துலட்சுமி ரெட்டி

இந்தியாவிலேயே மருத்துவப் பட்டம் பெற்ற முதல் தமிழ்ப் பெண். தேவதாசி முறையை ஒழிக்க அரும்பாடுபட்டவர். மிகச்சிறந்த சமூக சீர்திருத்தவாதியான இவர், சென்னை அடையாறில் புற்றுநோய் மருத்துவமனையை உருவாக்க அரும்பாடுபட்டவர். மகாத்மா காந்திஜியின் உப்பு சத்தியாகிரகப் போராட்டத்தை ஆதரித்து, சட்டமன்ற உறுப்பினர் பதவியை விட்டு விலகியவர்.

வெற்றி தந்த வாழ்வாதாரத் திட்டம்!

தற்போது கடற்கரைப் பகுதி மக்கள் வாழ்வில் பெரும் மாற்றம் ஏற்பட்டுள்ளது

கடற்கரைப் பகுதிகளில் வசிக்கும் மீனவ மக்களின் வாழ்வாதாரத்தை வளப்படுத்தி, அவர்களின் வாழ்வில் முன்னேற்றத்தை உருவாக்கித் தரும் உன்னத பணியினை சுனாமிக்குப் பிந்தைய நிலைத்த வாழ்வாதாரத் திட்டம் (IFAD) மேற்கொண்டு வருகிறது. இதன் விளைவாக தற்போது கடற்கரைப் பகுதி மக்கள் வாழ்வில் பெரும் மாற்றம் ஏற்பட்டுள்ளது.

நிலாபாரதி சுய உதவிக் குழுவின் தலைவியான திருமதி. ரேவதி சொல்வதை சற்று கேட்போம் வாருங்கள்...

முற்றம் வாசகர்கள் அனைவருக்கும் வணக்கம். சாதாரண மீனவப் பெண்ணான நான், இன்னைக்கு குழுத் தலைவியாக இருப்பதற்கு காரணம், சுனாமிக்குப் பிந்தைய நிலைத்த வாழ்வாதாரத் திட்டந்தான். நான் திருவள்ளூர் மாவட்டம், கும்மிடிப்பூண்டி, ஆரம்பாக்கம் கிராமத்துல வசிக்கிறேன். எனது கணவர் ஒரு மெக்கானிக். எங்களுக்கு ஒரு மகன் இருக்கிறான்.

திருமதி. ரேவதி, தலைவி,
நிலா பாரதி மகளிர் குழு,
ஆரம்பாக்கம், திருவள்ளுவர்
செல்போன்: 90038 94925

சுய உதவிக் குழுவைப் பத்தி எனக்கு எதுவும் தெரியாது. எங்க பகுதியில செயல்பட்டு வந்த சுய உதவிக் குழுவைச் சேர்ந்தவங்க என்னையும் குழுவுல சேரச் சொன்னாங்க. நானும் இன்னும் சிலரும் சேர்ந்து குழுவை ஆரம்பிச்சு அந்த குழுவுக்கு நிலா பாரதி ன்னு பேரையும் வைச்சோம். இதுக்கெல்லாம் ஊக்கம் கொடுத்தது எங்க பகுதியில் செயல்பட்டு வந்த சுனாமிக்குப் பிந்தைய நிலைத்த வாழ்வாதாரத் திட்டந்தான். இந்தத் திட்டத்தின் மூலம் எங்களுக்குப் பல பயிற்சிகளை கொடுத்தாங்க. அந்த சமயத்துல ஆரம்பாக்கம் ஊராட்சி அளவிலான கூட்டமைப்பை சீரமைச்சாங்க. அதுல எங்க குழுவையும் உறுப்பினரா சேர்த்தாங்க. கூட்டமைப்பு மூலமாக தந்த பல தொழிற்பயிற்சிகள்ள நானும் எங்க குழுவைச் சேர்ந்தவங்களும் கலந்துக்கிட்டோம்.

டெரகோட்டா பொருட்கள், கம்ப்யூட்டர் சாம்பிராணி, மெழுகுவர்த்தி போன்ற பொருட்கள் தயாரிப்பது, துணிகளில் பிரிண்டிங் செய்வது, எம்ப்ராய்டரிங் போடுவது போன்ற பயிற்சிகளில் எங்க குழுவைச் சேர்ந்தவங்க ரொம்ப ஈடுபாட்டோட கலந்துக்கிட்டு, சிறப்பாக பயிற்சியை முடிச்சாங்க. பயிற்சிக்குப் பின்னர் சுனாமிக்குப் பிந்தைய நிலைத்த வாழ்வாதாரத் திட்டம் மூலம் நிதி வசதி பெற்று, பொருட்களை தயாரிக்க ஆரம்பிச்சு விற்பனை செய்ய துவங்கினோம். நாங்க தயாரிக்கற பொருட்கள் தரமாகவும் நியாயமான விலையிலும் இருந்ததால பொதுமக்கள் மத்தியில நல்ல வரவேற்பு இருக்குது. தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனம் மூலம் நடைபெறும் விற்பனைக் கண்காட்சிகள்ல எங்களோட பொருட்கள விற்பனை செய்யவும் வாய்ப்பு கிடைக்குது.

> சுனாமிக்குப் பிந்தைய நிலைத்த வாழ்வாதாரத் திட்டம் மூலம் நிதி வசதி பெற்று, பொருட்களை தயாரிக்க ஆரம்பிச்சு விற்பனை செய்ய துவங்கினோம்.

சாதாரண மீனவப் பெண்ணாக, உலகம் அறியாமல் இருந்த என்னை, இன்று குழுவின் தலைவியாக உயரச் செய்தது, சுனாமிக்குப் பிந்தைய நிலைத்த வாழ்வாதாரத் திட்டம் மற்றும் தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனம் ஆகியவைகள் தான். ■

சுய உதவிக் குழுக்கள் சிறப்பாக செயல்பட...

பெண்கள் நாட்டின் கண்கள் என்ற வாசகத்திற்கு உயிரூட்டும் வகையில், தமிழ்நாட்டில் சுய உதவிக் குழுக்கள் மாபெரும் வளர்ச்சியடைந்து, பெண்கள் சமுதாயத்திலும் தவிர்க்க முடியாத சக்திகளாக உருவாகி உள்ளனர் என்பதை யாராலும் மறுக்க இயலாது. சுய உதவிக் குழுக்கள் வெற்றிகரமாக செயல்பட நிர்வாகிகளுக்கு நிர்வாக, நிதி மேலாண்மை, தொழிற்திறன் பயிற்சிகள் போன்றவை மகளிர் திட்டம் மூலமாக வழங்கப்படுகிறது. ஒரு குழுவின் நிலைத்த தன்மைக்கு அடிப்படை காரணம், உறுப்பினர்கள் அனைவரும் ஒருங்கிணைந்து செயல்படுதலும், சுழற்சி முறையில் நிர்வாகப் பொறுப்பினை உறுப்பினர்கள் அனைவரும் ஏற்பதும், நிர்வாகிகளின் வெளிப்படையான நிர்வாகமுமே ஆகும்.

குழுவில் எதற்காக நிர்வாகிகள் சுழற்சி முறையில் மாற்றம் செய்யப்படுகின்றனர்?

நிர்வாகிகளில் திறன் மற்றும் திறமைகளை மென்மேலும் வளர்த்திட...

சுழற்சி முறையில் நிர்வாகப் பொறுப்பு ஏற்று, அனைவரும் குழுவின் நலனுக்காக செயல்பட...

உறுப்பினர்களிடையே தன்னம்பிக்கையினை வளர்த்து, 'நாம்' என்ற ஒற்றுமை உணர்வினை வளர்த்திட...

சுழற்சி முறையில் நிர்வாகப் பொறுப்பினை ஏற்கும் புதிய நிர்வாகிகளின் சிறப்பான அணுகுமுறையின் மூலம், பிரச்சனைகளுக்கு எளிதாக சுமூக தீர்வு காண...

மேற்கண்ட காரணங்களுக்காக சுய உதவிக் குழுக்களின் நிர்வாகிகள் சுழற்சி முறையில் தேர்ந்தெடுக்கப் படுகின்றனர்.

சொ. ஸ்ரீனிவாசன்,
திட்ட ஒருங்கிணைப்பாளர்,
தமிழ்நாடு மாநில அரசு சாரா தொண்டு நிறுவனம்
மற்றும் தன்னார்வலர்களின் ஆதார மையம் (TNVRC)

(தொடரும்)

உங்கள் கால்நடைகளுக்கு கலப்புத் தீவனம் நீங்களே செய்யலாம்!

டாக்டர். P. துரைராசன்,
கால்நடை மருத்துவர்,
தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம்,
சென்னை.

வ. எண்.	தேவையான பொருட்கள்	100 கிலோ தீவனம் செய்ய தேவைப்படும் அளவு		
1.	கடலை புண்ணாக்கு	25 கிலோ	35 கிலோ	30 கிலோ
2.	பருத்திக் கொட்டை	25 கிலோ	33 கிலோ	....
3.	பருப்பு நொய்	24 கிலோ	....	15 கிலோ
4.	கோதுமை தவிடு	24 கிலோ	30 கிலோ	43 கிலோ
5.	வெல்ல பாகு	....	....	10 கிலோ
6.	தாது உப்பு	1 கிலோ	1 கிலோ	1 கிலோ
7.	சமையல் உப்பு	1 கிலோ	1 கிலோ	1 கிலோ
		100 கிலோ	100 கிலோ	100 கிலோ

5 லிட்டர் பால் கொடுக்கும் கறவை மாட்டிற்கு 2.5 கிலோ கலப்பு தீவனம் வழங்க வேண்டும். கூடுதலாக தருகின்ற ஒவ்வொரு 2.5 லிட்டர் பாலுக்கும், 1 கிலோ கலப்பு தீவனம் கூடுதலாக தர வேண்டும்.

கவிக்குயில் சரோஜினி நாயுடு

சுதந்திரப் போராட்ட பாடல்களைப் பாடி மக்கள் மனதில் விடுதலை உணர்வை ஏற்படுத்தியவர், வெள்ளையனே வெளியேறு இயக்கத்தில் பங்கு கொண்டதற்காக 21 மாதங்கள் சிறை சென்ற வீராங்கனை.

வாழ்வாதாரத்தை வளமாக்கும் வங்கி சேவைகள்...!

கே. எம். திருநாவுக்கரசு,
முதுநிலை ஆலோசகர்,
தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம்

ஒரு நாடு முன்னேறிய நாடு என்றால், அந்நாட்டிலுள்ள அனைத்து குடிமக்களுக்கும், குறிப்பாக கிராமப்புற மக்களுக்கு, எல்லா வசதி வாய்ப்புகளும் கிடைக்கப் பெற்று, ஏழ்மை நீங்கி இருக்க வேண்டும். நமது நாடு முன்னேறிக் கொண்டிருக்கும் நாடு.

'எல்லோருக்கும், குறிப்பாக கிராமப்புற ஏழை எளிய மக்களுக்கு எல்லா வசதிகளும் கிடைக்க வேண்டும்' என்ற நோக்கத்தோடு, மத்திய மாநில அரசுகள் பல்வேறு திட்டங்களைத் தீட்டி, செயல்படுத்தி வருகின்றன.

திட்டங்கள் உள்ளன. அந்த வணிக சேவைகளைப் பெற வழிகள் குறித்தும், அந்த திட்டங்கள் பற்றியும் இந்த பகுதி வாயிலாக அறிய உள்ளோம். உங்களில் நிறைய நபர்களுக்கு வங்கி கணக்கு இருக்கும். இருப்பினும் புதியவர்களுக்கும் மற்றும் புதியவைகளைத் தெரிந்துகொள்ளவும் இப்பகுதி உதவும். முதலில் வங்கி கணக்கு தொடங்க என்ன செய்ய வேண்டுமென்று பார்ப்போம்.

1. வாடிக்கையாளர்களை அறிந்து கொள்ளும் முறை (Know Your Customer)

வங்கிகளில் நல்ல பல சேமிப்பு திட்டங்கள், கடன் திட்டங்கள் உள்ளன. அந்த வணிக சேவைகளைப் பெற வழிகள் குறித்தும், அந்த திட்டங்கள் பற்றியும் இந்த பகுதி வாயிலாக அறிய உள்ளோம்.

அவைகளில் ஒன்று 'வங்கிகள் அரசுடைமையாக்கப்பட்டது.'

1969ல் வங்கிகள் அரசுடைமையாக்கப்பட்ட பிறகு, அதிக அளவில் வங்கிக் கிளைகள் கிராமங்களில் திறக்கப்பட்டது. இருப்பினும் சிறிய கிராமங்களுக்கு வங்கி சேவை சென்றடையவில்லை. சிறிய கிராமங்களில் உள்ளவர்கள், தொலைதூரத்திலுள்ள பெரிய கிராமங்கள் மற்றும் நகர்ப்புறத்திலுள்ள வங்கிகளுக்கு சென்று, வங்கி சேவைகளை அடைய வேண்டியுள்ளது. அதற்கு அரைநாள் அல்லது ஒருநாள் தேவையாகிறது. அந்த நாட்களில் வேலை இழப்பு ஏற்படும். ஊதியம் கிடைக்காது.

வங்கிக்கு சென்று வர பணம், நேரம் போன்றவை விரயமாகிறது என்பதை அறிந்த அரசு, நிதி உள்ளாக்கம் (Financial Inclusion) திட்டத்தில், சிறிய கிராமங்களில் வங்கிக் கிளைகளை திறந்தும், வங்கி வணிக தொடர்பாளர்கள் (BC) மற்றும் மிகவும் சிறிய வங்கி கிளைகளை (USB) நாடு முழுவதும் அறிமுகப்படுத்தியும், பொதுமக்களின் இருப்பிடத்தில் அல்லது மிக அருகிலேயே, குறைந்த செலவில் வங்கி சேவைகள் கிடைக்க செய்து வருகின்றனர்.

வங்கிகளில் நல்ல பல சேமிப்பு திட்டங்கள், கடன்

நாம் வங்கிக்கு சென்று கணக்கு துவங்க அணுகினால், வங்கிகள் விண்ணப்பத்தோடு வாடிக்கையாளர்களைப் பற்றி அறிந்து கொள்ள உதவும் ஒரு படிவத்தை (KYC) கொடுப்பார்கள். அது ஏன்? எதற்காக? என்பதை பார்ப்போம்.

தவறான வழியில் வரும் பணம் மற்றும் கருப்பு பணத்தின் புழக்கத்தை தவிர்க்கவும், தேசத்தின் ஒற்றுமையை சீர்குலைக்க முற்படும் தீவிரவாதிகளின் பண பரிமாற்றத்தை தடுக்கவும், வங்கிகள் தங்கள் உண்மையான வாடிக்கையாளர்களைப் பற்றியும், அவர்களின் நிதி பரிவர்த்தனைகளை அறிந்து கொண்டு, அவர்களுக்கு சிறப்பான முறையிலும், பாதுகாப்பான முறையிலும் சேவை செய்ய இந்த KYC முறை உதவுகிறது. இது மத்திய வங்கியின் (RBI) அறிவுறுத்தலின்படி நடைமுறைப்படுத்தப் பட்டுள்ளது. ■

(தொடரும்)

1969ல் வங்கிகள் அரசுடைமையாக்கப்பட்ட பிறகு, அதிக அளவில் வங்கிக் கிளைகள் கிராமங்களில் திறக்கப்பட்டது.

திண்டுக்கல் மாவட்டம், நிலக்கோட்டை தாலுக்கா, எத்திலோடை ஊராட்சி, இ.ஆவாரம்பட்டியில் வசித்து வரும் திருமதி. நீலாவதி சிறுவயதிலேயே போலியோ தாக்குதலினால் இரண்டு கால்களும் பாதிக்கப்பட்ட மாற்றுத் திறனாளி. 12ஆம் வகுப்பு வரை படித்துள்ள இவர் இன்று தடகளப் போட்டிகளில் சாதித்து வருகிறார். இதுகுறித்து திருமதி. நீலாவதி கூறும்போது, ‘பள்ளியில் படிக்கும் போதே எனக்கு விளையாட்டுப் போட்டிகளில் கலந்து கொள்ள ஆர்வம் இருந்தது. ஆனால் மாற்றுத் திறனாளி என்பதால் என்னால் முடியவில்லை. மாற்றுத் திறனாளிகளுக்கு என தனியாக விளையாட்டுப் போட்டிகள் நடத்தப்படுவதை அறிந்து, 2008ஆம் ஆண்டு முதல் மாற்றுத் திறனாளிகளுக்கான தடகளப் போட்டிகளில் கலந்து கொள்ள ஆரம்பித்தேன்.

2013ஆம் ஆண்டு மார்ச் மாதம் பெங்களூரில் நடைபெற்ற 14வது பாராஒலிம்பிக் சீனியர் நேஷனல் அதலெட்டிக் சாம்பியன்ஷிப் 2013 போட்டிகளில் கலந்து கொண்டு, வட்டு எறிதல் போட்டியில் முதலிடமும், குண்டு எறிதல் மற்றும் ஈட்டி எறிதல் ஆகிய போட்டிகளில் இரண்டாம் இடமும் பெற்றேன். கடந்த 13 ஆண்டுகளாக இப்போட்டிகளில் வெற்றி பெற்று வந்த ஹரியான மாநிலத்தைச் சேர்ந்த தீபா மாலிக் என்பவரை வென்று அதிக புள்ளிகள் எடுத்ததால், 2014 பிப்ரவரி மாதம் துபாய் சார்ஜாவில் நடைபெற்ற 4வது சர்வதேச பாராஒலிம்பிக் போட்டிகளில் கலந்து கொள்ள வாய்ப்பு கிடைத்தது. பாரா ஒலிம்பிக் போட்டியில் கலந்து கொள்ள தேர்வு பெற்ற எனக்குத் தேவையான அனைத்து உதவிகளும் வேண்டி கிராம வறுமை ஒழிப்புச் சங்கம் மூலம் தீர்மானத்தை நிறைவேற்றி, திண்டுக்கல் மாவட்ட புதுவாழ்வு திட்ட மேலாளர் திரு பா. மணிராஜ் அவர்களுக்கு அனுப்பப்பட்டது.

எனக்குத் தேவையான உதவி கோரி, மாநில புதுவாழ்வு திட்ட இயக்குநர் மற்றும் கூடுதல் திட்ட இயக்குநர் ஆகியோருக்கு மாவட்ட திட்ட மேலாளர் கடிதம் எழுதினார். அதன் அடிப்படையில் புதுவாழ்வு திட்டம் மூலம் விளையாட்டு உபகரணங்கள், உணவு, போக்குவரத்து செலவு மற்றும் போட்டியில் கலந்து கொள்ள தேவையான அனைத்து உதவிகளும் வழங்கப்பட்டுள்ளது. பல்வேறு வகையிலும் உதவிகள் செய்து எனக்கு ஊக்கமளித்து வரும் கிராம வறுமை ஒழிப்பு சங்கத்திற்கும், புதுவாழ்வு திட்டத்திற்கும் நன்றி கூறுவது எனது கடமை’ என்றார் நீலாவதி. ■

மாற்றுத் திறனாளியான நான் மிகவும் ஏழை குடும்பத்தைச் சேர்ந்தவள், திண்டுக்கல் மாவட்டம் எத்திலோடு ஊராட்சியில் கிராம வறுமை ஒழிப்பு சங்கத்தின் வழிகாட்டுதலுடன் செயல்பட்டு வரும் இதயகீதம் மாற்றுத் திறனாளிகள் சுய உதவிக் குழுவில் உறுப்பினராக உள்ளேன். புதுவாழ்வு திட்டம் மூலம் வழங்கப்பட்டு வரும் தனிநபர் கடனுதவி, ஆதார நிதி, உதவி உபகரணம் மற்றும் பயிற்சிகள் போன்றவற்றை பெற்றுள்ளேன்.

தடைகளை தகர்த்து

சாதனைகள் படைக்கும் நீலாவதி

தில்லையாடி வள்ளியம்மை

இந்தியாவிற்கு விடுதலை பெற்றுத் தந்தவர் மகாத்மா காந்திஜி. அந்த மகாத்மாவிற்கு விடுதலை உணர்வினை முதன்முதலில் ஏற்படுத்தியவர் தில்லையாடி வள்ளியம்மை. தென்னாப்பிரிக்காவில் மகாத்மா காந்திஜி நடத்திய போராட்டத்தில் பங்கு கொண்டவர். போராட்டத்தில் ஈடுபட்டதற்காக சிறை சென்றவர். மிகச் சிறு வயதிலேயே இவ்வுலகை விட்டு மறைந்தவர்.

நம் மாவட்டம்

வேலூர்

களப்பணி எழுத்துத் தேர்வு

வேலூர் மாவட்டத்தில் தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம் சார்பில் வேலூர் மாவட்ட மகளிர் குழுக்களில் இருந்து களப்பணியாளர்கள் தேர்வு செய்யப்பட உள்ளனர். இதற்கான எழுத்துத் தேர்வு 10.02.2014 அன்று வேலூர் மாவட்ட பஞ்சாயத்து அலுவலகத்தில் நடைபெற்றது. முதல் கட்ட மாக நடைபெற்ற தேர்வில் 291 பேர் பங்கேற்றனர். இதில் தேர்ச்சி பெறுபவர்களில் 84 நபர்கள் களப்பணியாளர்களாக தேர்ந்தெடுக்கப்படுவார்கள். விரைவில் அடுத்தக்கட்ட தேர்வுகள் நடத்தப்படும் என தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம் சார்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. ■

நாகப்பட்டினம்

கூட்டமைப்புகளுக்கு பெருங்கடன்

நாகப்பட்டினம் மாவட்டத்தில் 26.01.2014 குடியரசு தினத்தன்று நாகப்பட்டினம் ஊராட்சி ஒன்றியத்தை சேர்ந்த பொரவச்சேரி ஊராட்சி அளவிலான குழு கூட்டமைப்பிற்கு பெருங்கடனாக ரூ. 21 இலட்சம், செம்பனார் கோவில் ஊராட்சி ஒன்றியத்தை சேர்ந்த காளகஸ்தினாதபுரம் ஊராட்சி அளவிலான குழு கூட்டமைப்பிற்கு பெருங்கடனாக ரூ. 19.25 இலட்சம் ஆக மொத்தம் ரூ. 40.25 இலட்சத்திற்கான காசோலைகளை நாகை மாவட்ட ஆட்சியர் திரு. து முனுசாமி, இ.ஆ.ப., அவர்கள் வழங்கினார்கள். ■

விழுப்புரம்

CLG உறுப்பினர்களுக்குப் பயிற்சி

விழுப்புரம் மாவட்டத்தில் சானிடரி நாப்கின் உற்பத்தி செய்யும் சுகம் நாப்கின் உற்பத்திக் குழு பெயரில் 3 CLG ஒத்தத் தொழில் குழுக்கள் உருவாக்கப்பட்டு அவைகள் சிறப்பாக செயல்பட்டு வருகின்றன. அந்த குழுக்கள் மூலம் சானிடரி நாப்கின்கள் உற்பத்தி செய்ய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகிறது. அதன் ஒருபகுதியாக அக்குழுக்களில் உள்ள 30 நபர்களுக்கு INDSETI மூலம் தொழில் சார் பயிற்சி வழங்கப்பட்டது. ■

12 நாட்கள் நடைபெற்ற இப்பயிற்சியில் கலந்து கொண்டவர்களுக்கு 06.02.2014 அன்று நடைபெற்ற நிகழ்ச்சியில், விழுப்புரம் மாவட்ட மகளிர் திட்ட அலுவலர் (பொ) திரு. ஜி. நைனா நாயுடு அவர்கள் தலைமையில், INDSETI இயக்குநர் திருமதி. அல்லேயம்மாள் அவர்கள் முன்னிலையில் சான்றிதழ்கள் வழங்கப்பட்டது. இந்நிகழ்ச்சியில் உதவித் திட்ட அலுவலர்கள் திரு. Y. ஜான்சன், திரு S. ரமேஷ்பாபு, மற்றும் மேலாளர் திரு ப. செந்தில்குமார் மற்றும் ஒத்த தொழில் குழுக்களின் உறுப்பினர்கள் கலந்து கொண்டனர். ■

கிருஷ்ணகிரி

கல்லூரி சந்தை

தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம் சார்பாக, கிருஷ்ணகிரி அறிஞர் அண்ணா கலை மற்றும் அறிவியல் கல்லூரியில் 27.01.2014 முதல் 29.01.2014 வரையிலும், கிருஷ்ணகிரி அரசு மகளிர் கலைக்கல்லூரியில் 30.01.2014 முதல் 01.02.2014 வரையிலும் கல்லூரி சந்தை நடைபெற்றது. இந்த இரண்டு கல்லூரி சந்தைகளையும் கிருஷ்ணகிரி மாவட்ட ஆட்சியர் திரு. டி.பி. ராஜேஷ், இ.ஆ.ப., அவர்கள் துவக்கி வைத்தார். கிருஷ்ணகிரி மாவட்ட ஊரக வாழ்வாதார திட்ட இயக்குநர் திரு. ஜி. ராமையா, கல்லூரி முதல்வர்கள், உதவித் திட்ட அலுவலர்கள், மாவட்ட வழங்கல் மற்றும் விற்பனை சங்க மேலாளர், கல்லூரி பேராசிரியர்கள் மற்றும் மாணவ மாணவியர் கலந்து கொண்டனர். ■

கரூர்

சுய உதவிக் குழுக்களுக்கு கடனுதவி

கரூர் மாவட்டத்தில் புதுவாழ்வு திட்டத்தின் கீழ் அமைக்கப்பட்டுள்ள கிராம வறுமை ஒழிப்பு சங்கங்களின் மூலம் சுய உதவிக் குழுக்களை கண்டறிந்து அக்குழுக்களுக்கு வங்கிக் கடன் பெற்றுத் தருதல் போன்ற நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இந்தியன் ஓவர்சீஸ் வங்கியின் நிறுவன நாளை முன்னிட்டு சுய உதவிக் குழுக்களுக்கு கடன் வழங்கும் நிகழ்ச்சி 10.02.2014 அன்று நடைபெற்றது. இந்நிகழ்ச்சியில் கரூர் மாவட்ட ஆட்சியர் திருமதி எஸ். ஜெயந்தி, இ.ஆ.ப., அவர்கள் கலந்து கொண்டு, 30 மாற்றுத் திறனாளி குழுக்களுக்கு, ரூ. 13 லட்சம் கடனுதவி உட்பட 219 சுய உதவிக் குழுக்களுக்கு ரூ. 2 கோடியே 84 இலட்சம் கடனுதவி வழங்கினார். முதுநிலை மண்டல மேலாளர் திரு நரசிம்மன், முன்னோடி வங்கி மேலாளர் திரு முருகேசன், நபார்டு வங்கி மேலாளர் திரு பார்த்தீபன், புதுவாழ்வு திட்ட மேலாளர் திரு ரூபவேல் மற்றும் சுய உதவிக் குழுக்களின் உறுப்பினர்கள் கலந்து கொண்டனர். ■

திருவள்ளூர்

கலாச்சாரப் போட்டிகள்

திருவள்ளூர் மாவட்டத்தில் சுய உதவிக் குழுக்கள் மற்றும் ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகளுக்கு இடையிலான கலாச்சாரப் போட்டிகளை திருவள்ளூர் மாவட்ட ஆட்சியர் திரு. கொ. வீரராகவராவ், இ.ஆ.ப., அவர்கள் துவக்கி வைத்தார். இந்நிகழ்ச்சியில் மகளிர் திட்ட அலுவலர் (பொ) திருமதி. எஸ்.சினேகலதா, மாவட்ட புதுவாழ்வு திட்ட மேலாளர் திருமதி சிவகாமி ஸ்ரீ கிருஷ்ணா, இந்தியன் வங்கி ஆர்செட்டி இயக்குநர் திரு. ஏ.எஸ்.புருஷோத்தமன், பள்ளி ஆசிரியர்கள், கனரா வங்கி மற்றும் இந்தியன் ஓவர்சீஸ் வங்கியின் உதவி மேலாளர்கள் கலந்து கொண்டனர். கலாச்சாரப் போட்டிகளில் கலந்து கொண்டு வெற்றி பெற்றவர்களுக்கு பரிசுகள் மற்றும் சான்றிதழ்கள் வழங்கப்பட்டன.

திண்டுக்கல்

கல்லூரி சந்தை

திண்டுக்கல் மாவட்டத்தில் செயல்படுத்தப்பட்டு வரும் தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம் சார்பில் திண்டுக்கல் பார்வதீஸ் கலை மற்றும் அறிவியல் கல்லூரியில் நடைபெற்ற கல்லூரிச் சந்தையின் நிறைவு விழாவில் மாவட்ட ஆட்சியர் திரு ந. வெங்கடாசலம், இ.ஆ.ப., அவர்கள் கலந்து கொண்டு, கல்லூரிச் சந்தையில் அரங்குகள் அமைத்திருந்த மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கும், மாணவர்களுக்கும் பாராட்டுச் சான்றிதழ்களை வழங்கினார். இவ்விழாவில் மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குநர் திரு. மு.ச.பாண்டியராஜன், தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்க திட்ட இயக்குநர் திரு. ஆ.பழனி, பார்வதீஸ் கலை மற்றும் அறிவியல் கல்லூரி முதல்வர் முனைவர் எஸ்.எஸ். சீனிவாசன் உட்பட பலர் கலந்து கொண்டு சிறப்பித்தனர். ■

திருநெல்வேலி

சுகாதார வளாகங்கள் ஆய்வு

தமிழ்நாட்டிலுள்ள அனைத்து ஊராட்சிகளிலும் ஒருங்கிணைந்த மகளிர் சுகாதார வளாகங்கள் அமைக்கப்பட்டுள்ளன. இந்த மகளிர் சுகாதார வளாகங்களால் சுற்றுச்சூழல் காக்கப்படுவதுடன், திறந்தவெளியை கழிப்பிடமாகப் பயன்படுத்தும் நிலையும் குறைந்துள்ளது. மேலும் திறந்தவெளியை கழிப்பிடமாகப் பயன்படுத்துவதால் பெண்களுக்கு ஏற்படும் சிரமங்களும் சுகாதார வளாகங்களால் பெருமளவில் குறைந்துள்ளன.

திருநெல்வேலி மாவட்டத்தில் உள்ள ஊராட்சிகளில் செயல்பட்டு வரும் ஒருங்கிணைந்த மகளிர் சுகாதார வளாகங்களை திருநெல்வேலி மாவட்ட ஆட்சியர் டாக்டர். மு. கருணாகரன், இ.ஆ.ப., அவர்கள் பார்வையிட்டு அவைகள் பராமரிக்கப்படும் விதம் குறித்து ஆய்வு செய்தார். இவ்வளாகங்களை பராமரிக்கும் சுய உதவிக் குழுக்களின் உறுப்பினர்களிடமும், சுகாதார வளாகங்களைப் பயன்படுத்துபவர்களிடமும் சுகாதார வளாகங்கள் குறித்து பல்வேறு விபரங்களைக் கேட்டறிந்த ஆட்சியர் அவர்கள், சுகாதார வளாகங்களை சிறப்பாக பராமரிக்கத் தேவையான ஆலோசனைகளை வழங்கினார். ■

சுனாமிக்குப் பிந்தைய நிலைத்த வாழ்வாதாரத் திட்டம்

IFAD
Enabling poor rural people to overcome poverty

சுனாமிக்குப் பிந்தைய நிலைத்த வாழ்வாதாரத் திட்டம்

திரு. **விக்ரம் கபூர்,** இ.ஆ.ப.,
முதன்மைச் செயலாளர் / திட்ட இயக்குநர்

திரு. A. R. கிளாட்ஸ்டன் புஷ்பராஜ்,
கூடுதல் இயக்குநர்

திரு. இரா. இரவிச்சந்திரன்,
தகவல் மற்றும் தொழில் நுட்ப மேலாளர்

செயலாக்க உதவிக் குழு வருகை

பன்னாட்டு வேளாண் வளர்ச்சி நிதி உதவியுடன் தமிழகத்தில் செயல்பட்டு வரும் சுனாமிக்குப் பிந்தைய நிலைத்த வாழ்வாதாரத் திட்டத்தின் செயல்பாடுகளை ஆய்வு செய்து திட்டங்களை மேலும் சிறப்பாக செயலாக்கம் செய்திடவும், புதிய வாழ்வாதாரத் திட்டங்களை கொண்டு வருவதற்கான வாய்ப்புகளை அதிகப்படுத்தவும் இருநபர் செயலாக்க உதவிக் குழு 20.01.2014 முதல் 24.01.2014 வரை ஆய்வு மேற்கொண்டது.

இக்குழு நாகப்பட்டினம் மற்றும் கடலூர் மாவட்டங்களில் செயல்பட்டு வரும் திட்ட செயல்பாடுகளை நேரில் சென்று ஆய்வு செய்தது. நாகப்பட்டினம் மாவட்டத்தில் ஏற்படுத்தப்பட்டுள்ள பனை ஓலை மூலம் பெட்டிகள் செய்தல், காய்கறி உற்பத்தி, வெள்ளை பன்றி வளர்ப்பு, செங்கல் சூளை மற்றும் பிற குறுந்தொழில்களின் செயல்பாடுகள் குறித்து ஆய்வு மேற்கொண்டது.

ஊராட்சி அளவிலான கூட்டமைப்பில் உள்ள பயனாளிகளுக்கு துயர் குறை நிதி வழங்குதல், காப்பீட்டு தொகை வழங்குதல் போன்ற திட்ட செயல்பாடுகளும் ஆய்வு செய்யப்பட்டது. மேலும், மீனவர்களின் வாழ்வாதார முன்னேற்றம் மற்றும் அவர்களுக்கான திட்ட செயல்பாடுகள் குறித்து தென்னிந்திய மீனவர் சங்கங்களின் கூட்டமைப்பு பிரதிநிதிகளுடன் கலந்து ஆலோசனை செய்யப்பட்டது. பின்னர்,

கடலூர் மாவட்டம், திருச்சோபுரம் ஊராட்சியில் வேர்கடலை (ம) காய்கறி சாகுபடியை பார்வையிடுதல்.

ஊராட்சி அளவிலான கூட்டமைப்பில் உள்ள பயனாளிகளுக்கு துயர் குறை நிதி வழங்குதல், காப்பீட்டு தொகை வழங்குதல் போன்ற திட்ட செயல்பாடுகளும் ஆய்வு செய்யப்பட்டது.

நாகப்பட்டினம் மாவட்டத்தில் மாம்பழ விவசாயிகளுக்கான செயல்முறை ஆதரவுத் திட்டம் செயல்படும் கோவில்பத்து, வெள்ளபள்ளம், நாலுவேதபதி வடக்கு மற்றும் நாலுவேதபதி தெற்கு ஆகிய ஊராட்சிகளிலுள்ள மா பயிரிடும் விவசாயிகளை நேரில் சந்தித்து திட்ட செயலாக்கம் பற்றியும், இதுவரை பயனாளிகள் பெற்ற பயிற்சிகள், விளைபொருட்கள் விற்பனை செய்தது, அதன் மூலம் பெற்ற அதிக வருவாய் பற்றியும் ஆய்வு செய்யப்பட்டது.

இதனைத் தொடர்ந்து கடலூர் மாவட்டத்திலுள்ள கவரப்பட்டு கிராமத்தில் தான் (DHAN) தொண்டு நிறுவனம் மூலம் செயல்படும் பால் உற்பத்தி செயல்முறை ஆதரவு திட்டம் பற்றி குழு உறுப்பினர்களிடம் கலந்து ஆலோசனை செய்யப்பட்டது. மேலும், இம்மாவட்டத்தில் செயல்பட்டு வரும் குறுந்தொழில்கள், கிராம அளவிலான கூட்டமைப்பிற்கு புதிதாக கட்டப்பட்டுள்ள அலுவலக கட்டிடத்தை குழுவினர் பார்வையிட்டனர்.

செயலாக்க உதவிக் குழு, முதன்மைச் செயலாளர்/திட்ட இயக்குநர் திரு விக்ரம் கபூர், இ.ஆ.ப., மற்றும் இதர அலுவலர்களுடன் கலந்தாய்வு செய்தல்

கடலூர் மாவட்டம், குண்டு உப்புலவாடி ஊராட்சி அளவிலான கூட்டமைப்பு NABFINS நிதியத்தின் வியாபார முகவர்களாக செயல்பட்டு வரும் நிர்வாகிகளை நேரில் சந்தித்து கடனுதவி வழங்குதல், கடன் வசூல் செய்தல் மற்றும் கடன் தொகையை வங்கிகளில் செலுத்துவதில் உள்ள செயலாக்க நடைமுறை இடர்பாடுகள், கூடுதலாக தேவைப்படும் திட்ட தேவைகள் பற்றியும் விவாதித்து தக்க அறிவுரைகளும் வழங்கப்பட்டது.

இறுதியாக முதன்மை செயலாளர் / திட்ட இயக்குநர் திரு. விக்ரம் கபூர், இ.ஆ.ப., கூடுதல் இயக்குநர் திரு. கிளாட்ஸ்டன் புஷ்பராஜ் மற்றும் பிற அலுவலர்களுடன் கலந்தாய்வு செய்து, திட்டப் பணிகளை மேலும் நேர்த்தியாக செய்திட புதிய முயற்சிகளுக்கான செயல்பாடுகளை உடனடியாக மேற்கொள்ளவும் ஆலோசனை வழங்கப்பட்டது. ■

மீன் விற்பனை சங்கங்களின் கூட்டமைப்புகளுக்கு

மூலதன நிதி

சுனாமிக்குப் பிந்தைய நிலைத்த வாழ்வாதாரத் திட்டத்தில் மீனவர்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்த பல திட்டங்கள் செயல்பட்டு வருகிறது. மீனவர்களின் நலனுக்காக செயல்படும் மீன் விற்பனை சங்க கூட்டமைப்புகளை வலுப்படுத்த வழங்கப்பட்ட மூலதன நிதி ஒரு முக்கிய அங்கமாகும்.

சுனாமிக்குப் பிந்தைய நிலைத்த வாழ்வாதாரத் திட்டத்தின் மூலம் திருவள்ளூர், நாகப்பட்டினம் மற்றும் கன்னியாகுமரி ஆகிய மாவட்டங்களில் மீன் விற்பனை சங்கங்களின் கூட்டமைப்பு ஏற்படுத்தப்பட்டு அவைகள் சிறப்பாக செயல்பட்டு வருகின்றன. இந்த மூன்று கூட்டமைப்புகளின் மேற்பார்வையில் 102 மீன் விற்பனை சங்கங்கள் செயல்பட்டு வருகின்றன. இச்சங்கங்களின் உறுப்பினர்களாக உள்ள மீனவர்களுக்கு இந்த மூலதன நிதி வழங்கப்படுகிறது.

மீன் விற்பனை சங்கங்களின் உறுப்பினர்களாக உள்ள மீனவர்கள் தாங்கள் பிடிக்கும் மீன்களை பின்வருமாறு விற்பனை செய்கின்றனர். பிடிக்கப்படும் மீன்களில் 10 முதல் 15 சதவீத மீன்களை உள்ளூர் சந்தையில் விற்று, அதற்கான பணத்தை உடனுக்குடன் பெற்றுக் கொள்கின்றனர். அதன் பின்னர் மீதமுள்ள மீன்களில் 50 முதல் 60 சதவீதம் வரை வியாபாரிகளுக்கு விற்கின்றனர். 20 முதல் 30 சதவீத மீன்கள் வெளிநாட்டிற்கு ஏற்றுமதி செய்யப்படுகிறது. மீன்களுக்கான விற்பனை தொகை அவர்களுக்கு கிடைக்க 30 முதல் 45 நாட்கள் வரை ஆகின்றது. மேலும் மீனவர்கள் ஒருமுறை கடலுக்கு மீன்பிடிக்க செல்வதற்கு (டீசல், வலை பராமரிப்பு மற்றும் ஆட்கூலி போன்றவை) சுமார் ரூபாய் 10,000/– வரை செலவாகிறது.

விற்கப்பட்ட மீனுக்கான பணம் மீனவர்களுக்கு தேவைப்படும் தருணத்தில் கிடைக்காததால் மீன் பிடிக்க செல்ல தேவைப்படும் தொகையை கந்துவட்டிகாரர்களிடம் வாங்கும் சூழல் ஏற்படுகிறது. இதனை தவிர்க்கும் பொருட்டு மீனவர்களுக்கு தேவைப்படும் நேரத்தில் குறைந்த வட்டியில் பணம் கிடைக்க ஏதுவாக சுனாமிக்குப் பிந்தைய நிலைத்த வாழ்வாதாரத் திட்டத்தின் மூலம் ஒரு கோடியே ஒன்பது இலட்சம் ரூபாய் மீனவர்களின் கூட்டமைப்புகளுக்கு மூலதன நிதியாக வழங்கப்பட்டுள்ளது.

மீன் விற்பனை சங்கங்களின் கூட்டமைப்புகள், மீனவர்களின் தேவைக்கேற்ப சம்பந்தப்பட்ட மீன் விற்பனை சங்கங்களுக்கு பிரித்து வழங்கும், ஒரு மீனவர் சங்கத்தில் தான் பெறும் கடனை கட்டி முடித்த பின் அடுத்து கடன் வாங்க தகுதியுடையவராகிறார். இந்த மூலதன நிதி மீனவர்கள் கடன் சுமையிலிருந்து மீண்டு வர பெருமளவில் உதவுகிறது.

வ.எண்.	மீன் விற்பனை சங்கங்களின் கூட்டமைப்பு	மீன் விற்பனை சங்கங்களின் எண்ணிக்கை	வழங்கப்பட்ட நிதி (ரூ)
1	திருவள்ளூர்	12	9,00,000
2	நாகப்பட்டினம்	27	50,00,000
3	கன்னியாகுமரி	63	50,00,000

மூவாலூர் ராமாமிர்தம் அம்மையார்

தேவதாசி முறையை நீக்க அரும்பாடுபட்டவர். கதர் பிரசாரம், கள் எதிர்ப்பு, சாதி எதிர்ப்பு, பகுத்தறிவு பிரச்சாரம் என்று தம்மை முழுவதும் ஈடுபடுத்திக் கொண்டவர். இவரின் பெயரில் திருமண உதவித் திட்டம் ஏற்படுத்தப்பட்டு ஏழைப் பெண்களின் திருமணத்திற்கு உதவிகள் வழங்கப்படுகிறது.

துயர் குறைத்த புதுமையான திட்டம்

கடலூர் மாவட்டத்தில் துயர் குறைப்பு நிதியினால் பயன் பெற்ற திருமதி கலாதேவி கூறுகிறார்.

என் பெயர் கலாதேவி, நான் கடலூர் மாவட்டம், சிலம்பி மங்கலம் கூட்டு வள ஆதார மையத்திற்குட்பட்ட சின்னூர் புதுப்பேட்டை ஊராட்சியில் வசித்து வருகிறேன். அன்றாடம் கூலி வேலைக்கு சென்று, அதில் கிடைக்கும் குறைவான வருவாயில் குடும்பத்தை நடத்தி வந்தேன். இந்நிலையில் எதிர்பாரதவிதமாக நடந்த ஒரு விபத்தினால் எனது வலது கால் உடைந்து விட்டது. இதனால் வேலைக்கு செல்ல முடியாத நிலை உருவாகி, வருவாய் இல்லாததால் என் குடும்பத்தின் வாழ்வாதாரம் பாதிக்கப்பட்டது. மேலும் மருத்துவ செலவிற்குக்கூட என்னிடம் எவ்வித வசதியும் இல்லை. சுனாமிக்குப் பிந்தைய நிலைத்த வாழ்வாதார திட்டத்தின் மூலம் பலமுறை மருத்துவக் காப்பீடு பற்றி எடுத்துரைக்கப்பட்டும், நான் எந்த காப்பீடு திட்டத்திலும் இணையவில்லை. என்ன செய்வதென்று தெரியாமல் தவித்த போது துயர் குறைப்பு நிதியின் மூலம் 5000/- ரூபாய் கிடைத்தது. அந்த தொகையை என் மருத்துவ செலவிற்கு பயன்படுத்திக் கொண்டேன்.

தற்போது நல்ல முறையில் குணமடைந்து வருகிறேன். மேலும் மருத்துவ காப்பீட்டில் இணையாததால் ஏற்பட்ட விளைவையும் கண்கூட பார்த்தேன். சுனாமிக்குப் பிந்தைய நிலைத்த வாழ்வாதாரத் திட்டம் என்னைப் போன்ற ஏழை மக்களை எந்த சூழலிலும் கைவிடுவதில்லை. ■

தற்போது இக்குறுந்தொழில்களை மேலும் அதிக பயனாளிகளுக்கு வழங்கும் எண்ணத்துடன் NABFINS நிதி நிறுவனத்துடன் இணைந்து குறைந்த வட்டி அடிப்படையில் குறுந்தொழில்கள் செய்ய திட்டமிடப்பட்டது.

NABFINS உதவியுடன் குறுந்தொழில்கள் ஏற்படுத்துதல்

சுனாமிக்குப் பிந்தைய நிலைத்த வாழ்வாதாரத் திட்ட அலகின் மூலம் திருவள்ளூர், காஞ்சிபுரம், விழுப்புரம், கடலூர், நாகப்பட்டினம் மற்றும் கன்னியாகுமரி மாவட்டங்களிலுள்ள சுனாமியால் பாதிக்கப்பட்ட மக்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்தும் பொருட்டு, தேர்ந்தெடுக்கப்பட்ட பயனாளிகளுக்கு குறுந்தொழில்கள் ஆரம்பித்து கொடுக்கப்பட்டுள்ளன.

இத்திட்டத்தின்படி அனைத்து மாவட்டங்களிலும் சுனாமிக்குப் பிந்தைய நிலைத்த வாழ்வாதாரத் திட்டம், NABFINS நிதி நிறுவனம் அகியவற்றின் அலுவலர்கள் மற்றும் திட்ட ஆலோசகர்கள் கலந்து கொண்டு குறுந்தொழில் செய்ய முன்வரும் குழுக்களை நேர்காணல் செய்து அவர்களுக்கு தேவைப்படும் குறுந்தொழில் திட்ட கருத்துரு பெறப்பட்டது. பெறப்பட்ட திட்ட கருத்துருவினை ஆய்வு செய்த அலுவலர்கள், கிராமங்களுக்கு நேரடியாகச் சென்று 196 குறுந்தொழில்களுக்கான குழுக்களையும் தேர்வு செய்துள்ளனர். இந்த 196 குறுந்தொழில்களுக்கான விண்ணப்பங்கள், NABFINS அலுவலர்களால் ஆய்வு செய்யப்பட்டு அனுமதி பெறப்பட்டுள்ளது. காய்கறி சாகுபடி, பனை ஓலை பொருட்கள் தயாரிப்பு, உலர் மீன் தயாரிப்பு, கறவை மாடுகள் வளர்ப்பு, கடல் சிப்பி பொருட்கள் உற்பத்தி, இயந்திரம் மூலம் கயிறு தயாரித்தல் மற்றும் இதர குறுந்தொழில்களில் பயனாளிகளுக்கு அடிப்படை பயிற்சிகள் வழங்கப்பட உள்ளன. ■

மா

விவசாயிகளுக்கு செயல்முறை ஆதரவு ஒரு புதிய முயற்சி

பன்னாட்டு வேளாண் வளர்ச்சி நிதி உதவியுடன் கூடிய சுனாமிக்குப் பிந்தைய வாழ்வாதாரத் திட்டத்தின் கீழ் நாகப்பட்டினம் மாவட்டத்தில் உள்ள தலைஞாயிறு வட்டத்திற்கு உட்பட்ட கோவில்பத்து, வெள்ளபள்ளம், நால்வேதபதி வடக்கு, நால்வேதபதி தெற்கு ஆகிய நான்கு ஊராட்சிகளில் உள்ள 16 கிராமங்களில் உள்ள மா பயிரிடும் விவசாயிகளுக்கு கோவனன்ட் மேம்பாட்டு மையத்தின் மூலம் செயல்முறை ஆதரவு கொடுப்பதற்குண்டான புரிந்துணர்வு ஒப்பந்தம் இடப்பட்டது.

இத்திட்டத்தின் மூலம் சராசரியாக ஒரு குழுவுக்கு 15 மா பயிரிடும் விவசாயிகள் வீதம் 51 துவக்க நிலை உற்பத்திக் குழுக்கள் அமைக்கப்பட்டன. இந்த 51 குழுக்களில் மா பயிரிடும் 887 விவசாயிகள் உறுப்பினர்களாக சேர்ந்துள்ளனர்.

அமைக்கப்பட்ட மா உற்பத்தி குழு ஒன்றுக்கு சுழல் நிதி யாக ரூபாய் 20,000/- வீதம் வழங்கப்பட்டு, கள்ளிமேடு இந்தியன் வங்கியில் 51 சேமிப்புக் கணக்குகள் துவங்கப்பட்டுள்ளன. இந்நிதி உதவியுடன் விவசாயிகள் மா சாகுபடி செலவுகளுக்கு மாங்காய் கொள்முதல் தரகர்களிடம் ஏற்கனவே பெற்ற நுண்கடன் தொகையை செலுத்தி விட்டதால், அவர்கள் சுதந்திரமாக தங்கள் விளை பொருளை அதிக விலைக்கு விற்கும் நிலை ஏற்பட்டுள்ளது. குழுக்களிலுள்ள விவசாயிகளுக்கு திறன் வளர்ப்பு பயிற்சி மூலமாக மா உற்பத்தியை பெருக்குவது, மா சாகுபடி செலவை குறைப்பது, மா விலை பொருட்களை விற்பனை செய்தல் மற்றும் மாங்காய், மாம் பழம் இவற்றிலிருந்து உயர் தர மதிப்பீடு செய்வது தொடர்பான பயிற்சிகளும் வழங்கப்பட்டன.

மேலும், 51 குழுக்களை சார்ந்த விவசாயிகளுக்கும், இயற்கை வேளாண் முறையில் மா சாகுபடி செய்வது பற்றிய சிறப்பு பயிற்சியும் வழங்கப்பட்டு, மாமரங்களுக்கு தேவையான இயற்கை உரம், நீர் பாய்ச்சல், பயிர் பாதுகாப்பு செய்யப்பட்டு, நேரடி பராமரிப்பு மூலம் அனைத்து மரங்களும் சரியான பருவத்தில் மகசூலுக்கு கொண்டு வரப்பட்டது. நான்கு மா கொள்முதல் நிலையங்கள் ஆரம்பிக்கப்பட்டு, அதன் மூலம் 44,984 கிலோ நாடு, ருமானியா, செந்தூரா, நீலம், கவுதாரி போன்ற மா வகைகள் நல்ல விலைக்கு கொள்முதல் செய்யப்பட்டு, பிற நிறுவனங்களுக்கும் விற்பனை செய்யப்பட்டது. இதன் மூலம் இப்பகுதி விவசாயிகள் இயற்கை வேளாண் அடிப்படையில் தங்கள் மாமரங்களை நல்ல முறையில் பராமரித்து, அதிக மகசூலை அறுவடை செய்து உள்ளூர் வியாபாரிகளையும், மா கொள்முதல் தரகர்களையும் தவிர்த்து, நேரடி விற்பனை செய்ததால் முதல் பருவத்திலேயே ரூபாய் 62,000/- வரை இலாபம் ஈட்டி, தங்கள் வாழ்வாதாரத்தை மேம்படுத்தியுள்ளனர். ■

ஜான்சி ராணி லட்சுமி பாய்

வட இந்தியாவில் உள்ள ஜான்சி என்ற நாட்டின் ராணியான இலட்சுமிபாய் கி.பி. 1857ஆம் ஆண்டு வட இந்தியாவில் ஆங்கிலேயர்களுக்கு எதிராக நடைபெற்ற சிப்பாய் கிளர்ச்சியில் பங்கேற்று தன்னுயிரை ஈந்தவர். இன்றும் இவரின் வீரம் மிகுந்த வாழ்வு வடஇந்தியாவில் நாடகங்களாக நடத்தப்பட்டும், கதைகளாக பேசப்பட்டும் வருகிறது.

சு

சுய உதவிக் குழு மகளிர் இன்று வங்கி முகவர்களாகவும் சிறப்பாக செயல்பட்டு வருகின்றனர். இது குறித்து சுபா, செல்லாயி, பார்வதி மற்றும் வாணி ஆகியோர் விவாதிக்கிறார்கள்.

சுபா: அனைவருக்கும் வணக்கம்.

செல்லாயி: வணக்கம் சுபா...இன்னைக்கு எதைப் பற்றி பேசப் போறோம்?

சுபா: வங்கி முகவர்களைப் பற்றி பேசலாம்...

வேணி: வங்கி முகவர்களா? யார் அவங்க?

சுபா: சுய உதவிக் குழுவைச் சேர்ந்த பெண்கள்தான் இப்ப வங்கி முகவரா இருக்காங்க என்பது தெரியுமா உங்களுக்கு?

செல்லாயி: சுய உதவிக் குழுக்களைச் சேர்ந்தவங்களா வங்கி முகவரா இருக்காங்க?

சுபா: தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனம் மூலமா கூட்டமைப்புகள்ல உறுப்பினராக இருக்கிற சுய உதவிக் குழுக்களைச் சேர்ந்த பெண்களுக்கு வங்கி முகவர் பயிற்சி தந்திருக்காங்க. அதன்படி வங்கி முகவர் பயிற்சி பெற்ற பெண்கள் இப்ப வங்கி முகவரா இருக்காங்க.

செல்லாயி: அப்படியா? அவங்க என்ன செய்வாங்க?

சுபா: சின்ன கிராமத்துல இருக்கிறவங்களுக்கும் வங்கிகளோட சேவை சென்றடைய வேண்டும் என்ற நோக்கத்துடன், சுய உதவிக் குழு உறுப்பினரா இருக்கிற பெண்களுக்கு வங்கி முகவர் பணி வழங்கப்படுகிறது. வங்கி முகவர்கள் தங்கள் கிராமத்தில் வசிக்கும் மக்களிடம் வங்கி நடைமுறை, கடன் திட்டங்கள், சேமிப்பு போன்றவை குறித்து விளக்கி சொல்லி, அவங்களை வங்கியில் கணக்கு துவங்க சொல்வாங்க. அவங்களுக்கு வங்கியோட தொடர்பு ஏற்படுத்த உதவி செய்வாங்க. அவங்களுக்கு வங்கியின் மூலமா கிடைக்கும் நன்மைகளை எடுத்துச் சொல்லுவாங்க.

செல்லாயி: அட அவ்வளவுதானா? இதுனால என்ன பிரயோசனம்?

சுபா: என்ன இப்படி சொல்லிட்ட... வங்கி முகவரோட வேலை வங்கிக் கணக்கு ஆரம்பிக்க சொல்லுவது மட்டுமில்ல. இப்ப மகாத்மா காந்தி ஊரக வேலைவாய்ப்பு திட்டத்துல வேலை செய்யறவங்களுக்கு ஊதியம் தருவது, முதியோர்களுக்கு உதவித் தொகை பெற்றுத் தருவது போன்ற வேலைகளை செய்வதோட மட்டுமில்லாம, கிராமப்புற மக்களுக்கு வங்கிகள் மூலம் கிடைக்கக் கூடிய பயன்களையும் பெற்றுத் தருவதுதான் வங்கி முகவரோட வேலையாகும்.

பார்வதி: அப்படியா...ஆச்சரியமாக இருக்குதே...

சுபா: இது என்ன ஆச்சரியம்... சுய உதவிக் குழு பெண்கள் எந்த வேலையையும் சிறப்பா செய்வாங்க என்பதற்கு இந்த வங்கி முகவர் பணியும் ஒரு உதாரணம். ஏனென்றால் கிராமப்புறத்தில் வசிக்கும் மக்கள் பெரும்பாலானவங்க வங்கி என்றாலே ஏதோ பெரிய விஷயம் என்று நினைச்சிருந்தாங்க. இப்ப வங்கியில கிராமப்புற மக்களும் பெருமளவில் கணக்குத் துவங்கி இருக்காங்க. இதற்கு வங்கி முகவரா இருக்கிற நம்ம சுய உதவிக் குழு பெண்கள்தான் காரணம் என்பது அனைவருக்கும் தெரியுமே.

வாணி: யாரெல்லாம் வங்கி முகவராக இருக்காங்க?

சுபா: மகளிர் திட்டம் மற்றும் புதுவாழ்வு திட்டம் ஆகியவற்றின் கீழ் செயல்படும் சுய உதவிக் குழுக்களைச் சேர்ந்த பெண்கள் வங்கி முகவரா இருக்காங்க.

வாணி: வங்கி முகவர் பணியால இன்னைக்கு பெண்கள் மேலும் வளர்ச்சி பெற்று வராங்கதானே?

சுபா: ஆமா. சுய உதவிக் குழுக்களைச் சேர்ந்த பெண்களோட வளர்ச்சிக்கு பாடுபட்டு வரும் தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனம் மற்றும் புதுவாழ்வு திட்டத்திற்கும் நன்றி சொல்லணும்... சரியா?

செல்லாயி: ரொம்ப சரி... அடுத்த முறை வேற விஷயம் குறித்து பேசுவோம்.

(சுபா விடைபெற்று செல்ல... செல்லாயி, வாணி மற்றும் பார்வதி ஆகியோர் வீட்டிற்கு செல்கின்றனர்.) ■

முற்றக் கச்சேரி

பகுதி - 12

ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித்துறை

புது வாழ்வு திட்டம்

முருகன் சுய உதவிக் குழுவின் உறுப்பினர்களான லட்சுமி மற்றும் சுப்புலட்சுமி ஆகிய இருவரும் கூட்டமைப்பில் தலா ரூ. 20 ஆயிரம் கடன் பெற்று, பாளையங்கோட்டை பூமாலை வணிக வளாகத்தில் பழக்கடை நடத்தி வருகிறார்கள்.

பக்கம்...28

விருதுநகர் மாவட்ட புதுவாழ்வு திட்டம் சார்பில் சாத்தூர், வெம்பக்கோட்டை, வத்திரா யிருப்பு, நரிக்குடி ஆகிய ஒன்றியங்களில் உள்ள 165 ஊராட்சிகளிலும் தேசிய வாக்காளர் தின விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் நடைபெற்றன.

பக்கம்...29

கிராம வறுமை ஒழிப்பு சங்கத்தில் உள்கற்றல் நடத்தி பணியில் தொய்வுகள் இருப்பின் கால நிர்ணயம் மற்றும் பொறுப்புகளை பகிர்ந்தளித்து பிரச்சனைகளுக்கு தீர்வு காண உதவுகின்றோம்.

பக்கம்...32

சூரியசக்தி

நமது எதிர்காலம் நம் கையில்

பழ வகைகள் விற்பனைக் கூடம்

திருநெல்வேலி மாவட்டம், வன்னிக்கோனேந்தல் பகுதிக்குட்பட்ட தேவர்குளம் ஊராட்சியில் செயல்படும் முருகன் சுய உதவிக் குழுவின் உறுப்பினர்களான லட்சுமி மற்றும் சுப்புலட்சுமி ஆகிய இருவரும் கூட்டமைப்பில் தலா ரூ. 20 ஆயிரம் கடன் பெற்று, பாளையங்கோட்டையிலுள்ள பூமாலை வணிக வளாகத்தில் பழக்கடை நடத்தி வருகிறார்கள். கடைக்குத் தேவையான பழ வகைகளை மொத்த வியாபாரிகளிடம் இருந்து வாங்கி, விற்பனை செய்வதன் மூலம் மாதந்தோறும் ரூ. 7000/– வரை ஒவ்வொருவருக்கும் வருவாய் கிடைக்கிறது. தங்களுக்கு மாதந்தோறும் கணிசமான வருவாய் கிடைக்க வாய்ப்பு ஏற்படுத்தி தந்த புதுவாழ்வு திட்டத்திற்கும், கிராம வறுமை ஒழிப்பு சங்கத்திற்கும் லட்சுமி மற்றும் சுப்புலட்சுமி ஆகிய இருவரும் தங்களின் மனமார்ந்த நன்றியினை தெரிவித்துக் கொள்கின்றனர். ■

கூட்டமைப்பில் தலா ரூ. 20 ஆயிரம் கடன் பெற்று, பாளையங்கோட்டையிலுள்ள பூமாலை வணிக வளாகத்தில் பழக்கடை நடத்தி வருகிறார்கள். கடைக்குத் தேவையான பழ வகைகளை மொத்த வியாபாரிகளிடம் இருந்து வாங்கி, விற்பனை செய்வதன் மூலம் மாதந்தோறும் ரூ. 7000/– வரை ஒவ்வொருவருக்கும் வருவாய் கிடைக்கிறது.

மாற்றுத் திறனாளி பெற்ற புதுவாழ்வு

கரூர் மாவட்டம், மைலம்பட்டியில் வசிக்கும் முகமது இஸ்மாயில், காதுகேளாத மாற்றுத் திறனாளி. பிஸ்மி சிறப்பு சுய உதவிக் குழுவில் உறுப்பினராக உள்ள இவருக்கு, கிராம வறுமை ஒழிப்பு சங்கம் மூலம் தனிநபர் கடனாக ரூ. 8 ஆயிரமும், ஆதார நிதியாக ரூ. 10 ஆயிரமும் வழங்கப்பட்டது. இந்தத் தொகையை முதலீடாகக் கொண்டு தற்போது முகமது இஸ்மாயில் குழந்தைகள் விளையாட்டுப் பொம்மைகளை வாங்கி விற்பனை செய்து வருவதன் மூலம் நாள் ஒன்றுக்கு ரூ. 300/–க்கும் அதிகமாக வருவாய் பெற்று வருகிறார். ■

புதுவாழ்வு தந்த கணினிப் பயிற்சி

மதுரை மாவட்டம், சேடப்பட்டி ஒன்றியம், பூசலாபுரம் கிராமத்தில் வசித்து வருபவர் லதா. தனிநபர் கடனாக ரூ. 8000/– பெற்று ஆடு வாங்கி வளர்த்து தனது குடும்பத்தை நடத்தி வந்தார். இந்நிலையில் லதா, சேடப்பட்டியில் நடைபெற்ற கணினிப் பயிற்சியில் கலந்து கொண்டு, Tally C-Booking உட்பட பல்வேறு பயிற்சிகள் பங்கு பெற்று தற்போது கணினியை திறமையாக கையாளும் திறன் பெற்றுள்ளார். கணினி என்றாலே என்னவென்று தெரியாத தன்னை இன்று கணினியை திறமையாக பயன்படுத்தும் அளவிற்கு மாற்றிய புதுவாழ்வு திட்டத்திற்கு நன்றி என்கிறார் லதா. ■



சரவணனுக்கு கிடைத்த புதுவாழ்வு

தருமபுரி மாவட்டம், புட்டிரெட்டிப்பட்டியில் வசித்து வரும் முருகம்மாளின் மூத்த மகன் சரவணன் பிறக்கும் போதே மாற்றுத்திறன் படைத்தவர். கணவனை இழந்த முருகம்மாள் தனது குழந்தைகளுடன் மிகவும் சிரமத்துடன் வாழ்ந்து வந்தார். புதுவாழ்வு திட்டத்தின் மூலம் இவருக்கு கறவை மாடு வாங்க ரூ. 20 ஆயிரம் கடன் வழங்கப்பட்டது. தற்போது கறவை மாட்டை பராமரித்து, பால் கறந்து விற்பனை செய்து வருகிறார். அதன் மூலம் தனது குடும்பதை வறுமையின் பிடியில் இருந்து விடுவித்து வருகிறார். தன்னைப் போன்ற ஏழைகளின் வறுமையை போக்கும் மகத்தான திட்டம் புதுவாழ்வு திட்டம் எனக் கூறுகிறார் முருகம்மாள். ■

தேசிய வாக்காளர் தினம்

விருதுநகர் மாவட்ட புதுவாழ்வு திட்டம் சார்பில் சாத்தூர், வெம்பக்கோட்டை, வத்திராயிருப்பு, நரிக்குடி ஆகிய ஒன்றியங்களில் உள்ள 165 ஊராட்சிகளிலும் தேசிய வாக்காளர் தின விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் நடைபெற்றன. கிராம வறுமை ஒழிப்பு சங்கங்கள், சுய உதவிக் குழுக்கள் மற்றும் கூட்டமைப்புகளின் உறுப்பினர்கள் வாக்காளர் தின உறுதிமொழியினை எடுத்தனர். மேட்டமலை ஊராட்சியில் நடைபெற்ற தேசிய வாக்காளர் தின பேரணியை மாவட்ட புதுவாழ்வு திட்ட மேலாளர் திரு செ. சண்முகராஜ் துவக்கி வைத்தார். இந்த பேரணிகளில் சுய உதவிக் குழுவினர் பெருமளவில் கலந்து கொண்டனர். ■

வாள்சண்டை போட்டியில் பதக்கம் வென்ற தமிழக வீராங்கனை

தேசிய அளவில் பல்கலைக் கழகங்களுக்கிடையிலான வாள் சண்டை போட்டி 02.01.2014 அன்று பஞ்சாப்பில் நடைபெற்றது. இப்போட்டியில் நாட்டிலுள்ள அனைத்து பல்கலைக் கழகங்களின் சார்பிலும் வாள் சண்டை வீரர்கள் கலந்து கொண்டனர். இந்தப் போட்டியில் சென்னைப் பல்கலைக் கழக அணியின் சார்பில் கலந்து கொண்ட தமிழக வீராங்கனை செல்வி. க. மோகன லட்சுமி, கேரள அணியினை எதிர்த்து விளையாடி வெண்கலப் பதக்கம் வென்றுள்ளார்.

செல்வி. மோகனலட்சுமியின் தாயார் திருமதி அ. அமுதா, சென்னை மகளிர் திட்ட அலுவலகத்தில் கண்காணிப்பாளராக பணிபுரிந்து வருகிறார். ■

தேசிய வாக்காளர் தினம்

நாமக்கல் மாவட்டத்தில் தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனம் மூலம் அனைத்து ஊராட்சிகளிலும் தேசிய வாக்காளர் தின விழிப்புணர்வு பேரணி நடைபெற்றது. இப்பேரணிகளில் மாவட்ட மகளிர் திட்ட அலுவலர், மாவட்ட புதுவாழ்வு திட்ட மேலாளர், உதவித் திட்ட அலுவலர்கள், உதவித் திட்ட மேலாளர்கள், மகளிர் திட்டம், புதுவாழ்வு திட்டம், கிராம வறுமை ஒழிப்புச் சங்கம் ஆகியவற்றினைச் சேர்ந்த சுய உதவிக் குழுக்கள், கூட்டமைப்புகள் ஆகியவற்றின் உறுப்பினர்கள், பள்ளி கல்லூரி மாணவ மாணவிகள், பொதுமக்கள் உட்பட ஏராளமானவர்கள் கலந்து கொண்டனர். மேலும் நாமக்கல் மாவட்டத்தின் அனைத்து ஊராட்சிகளிலும் தேசிய பெண் குழந்தைகள் தினமும் சிறப்பாக நடைபெற்றது. இதிலும் அனைவரும் கலந்து கொண்டு சிறப்பித்தனர். ■

மாவட்ட வருவாய் அலுவலர் திருமதி. மு. அருணா, உணவுப் பொருள் மற்றும் நுகர்வோர் பாதுகாப்பு மண்டல ஒருங்கிணைப்பாளர் திரு சொக்கலிங்கம், திரு கோபால், மாவட்ட புதுவாழ்வு திட்ட மேலாளர் திரு ரூபவேல் ஆகியோர் பயிற்சி அளித்தனர்.

நுகர்வோர் பாதுகாப்பு குறித்த விழிப்புணர்வு பயிற்சி முகாம்

கரூர் மாவட்டம், தாந்தோணிமலை ஒன்றிய அலுவலகத்தில் 05.02.2014 அன்று உணவுப் பொருள் மற்றும் நுகர்வோர் பாதுகாப்பு துறை சார்பாக புதுவாழ்வு திட்ட மகளிர் சுய உதவிக் குழு உறுப்பினர்களுக்கு உணவுப் பொருள் மற்றும் நுகர்வோர் பாதுகாப்பு குறித்த விழிப்புணர்வு பயிற்சி முகாம் நடைபெற்றது. இம்முகாமினை மாவட்ட ஆட்சியர் திருமதி. ச. ஜெயந்தி, இ.ஆ.ப., அவர்கள் தொடங்கி வைத்தார். புதுவாழ்வு திட்ட மகளிர் சுய உதவிக் குழுக்களைச் சேர்ந்த 52 உறுப்பினர்கள் இதில் கலந்து கொண்டனர். ■

ராணி வேலு நாச்சியார்

ஆங்கிலேய ஆதிக்கத்தை எதிர்த்துப் போராடிய முதல் பெண்மணி என்ற சிறப்பினை பெற்றவர். கி.பி. 1780 முதல் கி.பி. 1783 வரை சிவகங்கை சீமையை ஆண்ட ராணி வேலு நாச்சியார் ஆவார். காளையார் கோவிலை ஆங்கிலேய படைகள் முற்றுகையிட்ட போது, வேலு நாச்சியார் வீரத்துடன் எதிர்த்ததன் மூலம் தமிழக மகளிர் வீரத்தில் குறைந்தவர்கள் இல்லை என்பதை நிரூபித்தார்.

இயற்கை வேளாண்மை குறித்த பயிற்சி

கோவை மாவட்டம், தொண்டாமுத்துூர் ஒன்றியத்திலுள்ள பழங்குடியின மகளிர் விவசாய கூட்டமைப்பு உறுப்பினர்களுக்கான 'இயற்கை வேளாண்மை' குறித்த பயிற்சி 02.01.2014 முதல் 04.02.2014 வரை சாடிவயல் கிராமத்தில் நடைபெற்றது. புதுவாழ்வு திட்டம் சார்பில் நடைபெற்ற இப்பயிற்சி முகாமில், இயற்கை வேளாண்மை சாகுபடி, இயற்கை உரங்கள், கரைசல்கள், மண்புழு உரம், அசோலா பண்ணை, பஞ்சகாவ்யம், பூச்சி விரட்டி மற்றும் மீன் அமிலம் போன்ற இயற்கை மருந்துகள் போன்றவை குறித்து திருநெல்வேலி பொய்கை அறக்கட்டளையைச் சேர்ந்த திரு நடராஜ் அவர்கள் விரிவாக விளக்கமளித்தார்.

மேலும் விவசாய நிலங்களின் அருகிலேயே செய்முறை விளக்கமாக செய்து காண்பிக்கப்பட்டது. இதனைத் தொடர்ந்து சார்கார் போரத்தி, பட்டியார்கோவில்பதி, பச்சான்வயல் ஆகிய பழங்குடியின கிராமங்களைச் சேர்ந்த பழங்குடியின விவசாய மகளிருக்கும், இயற்கை உரங்கள் மற்றும் இயற்கை மருந்துகளை தயாரிக்க பயிற்சி அளிக்கப்பட்டது. இயற்கை உரங்கள் மற்றும் கரைசல்கள் தயாரிப்பதை குறும்படமாக எடுக்கப்பட்டு பதிவு செய்யப்பட்டுள்ளது.

இந்த நிகழ்ச்சியில் கோவை மாவட்ட புதுவாழ்வு திட்ட மேலாளர் திரு பிலிப் இளையராஜா, உதவித் திட்ட மேலாளர்கள் திரு சுதாகர், திரு கார்த்திகைவேல் மற்றும் பழங்குடியின மகளிர் விவசாய கூட்டமைப்பின் உறுப்பினர்கள், சுய உதவிக் குழுக்களின் உறுப்பினர்கள் கலந்து கொண்டனர். ■

பல்வேறு திறன் பயிற்சிகள் குறித்த விழிப்புணர்வு அனைத்து தரப்பினருக்கும் சென்றடையவும், தகுதி வாய்ந்த இளைஞர்களை நேரடியாக பயிற்சியில் சேர்க்கவும் இளைஞர் திறன் வளர்ப்பு விழிப்புணர்வு பிரச்சார ஊர்தி வடிவமைக்கப்பட்டுள்ளது.

விழிப்புணர்வு பிரச்சார ஊர்தி

தேனி மாவட்டத்தில் போடி, க.மயிலாடும் பாறை, தேனி மற்றும் ஆண்டிப்பட்டி ஆகிய ஒன்றியங்களைச் சார்ந்த 80 கிராம ஊராட்சிகளில் புதுவாழ்வு திட்டம் சிறப்பாக செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின் மூலம் ஏழை, மிகவும் ஏழை, நலிவுற்றோர் மற்றும் மாற்றுத் திறனாளிகள் ஆகியோரின் வாழ்வாதார முன்னேற்றத்திற்காக வழங்கப்படும் பல்வேறு திறன் பயிற்சிகள், தொழில் பயிற்சிகள் குறித்த விழிப்புணர்வு அனைத்து தரப்பினருக்கும் சென்றடையவும், தகுதி வாய்ந்த இளைஞர்களை நேரடியாக பயிற்சியில் சேர்க்கவும் இளைஞர் திறன் வளர்ப்பு விழிப்புணர்வு பிரச்சார ஊர்தி வடிவமைக்கப்பட்டுள்ளது.

இந்த பிரச்சார ஊர்தியினை 27.01.2014 அன்று காலை தேனி மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகத்தில் மாவட்ட ஆட்சியர் டாக்டர் கே. எஸ். பழனிசாமி, இ.ஆ.ப., அவர்கள் துவக்கி வைத்தார்கள். இந்நிகழ்ச்சியில் மாவட்ட புதுவாழ்வு திட்ட மேலாளர் திரு. எஸ். கழுகாசலமூர்த்தி, உதவித் திட்ட மேலாளர்கள் மற்றும் மாவட்ட மகமை உறுப்பினர்கள் கலந்து கொண்டனர். இந்த பிரச்சார ஊர்தியானது தேனி மாவட்டத்தின் அனைத்து பகுதிகளுக்கும் சென்று புதுவாழ்வு திட்டம் மூலம் வழங்கப்படும் தொழிற்பயிற்சி மற்றும் திறன் பயிற்சி குறித்த பல்வேறு விபரங்களை பொதுமக்களிடம் துண்டு பிரசுரங்கள் மூலம் வெளிப்படுத்தும். ■

சூரியசக்தி

நமது எதிர்காலம் நம் கையில்

புதுப்பிக்கத்தக்க ஆற்றல் என்பது சூரியவொளி, காற்று, நீர், கடல் அலைகள் மற்றும் புவி வெப்பம் போன்ற இயற்கை வடிவங்களில் இருந்து பெறப்படும் சக்தியாகும். சூரிய ஒளி மற்றும் வெப்பத் தின் வடிவத்தில் சூரியனில் இருந்து வரும் ஆற்றலானது 'சூரிய சக்தி' என்று அழைக்கப்படுகிறது. நமது நாட்டில் புதுப்பிக்கத்தக்க இயலாத ஆற்றல் வளங்களான நிலக்கரி, பெட்ரோலியம், இயற்கை எரிவாயு போன்றவற்றில் அத்தனை வளமானதாக இல்லை.

இந்தியாவில் இருக்கும் அனைத்து புதுப்பிக்கத்தக்க வளங்களுடன் ஒப்பிடுகையில், பெரும்பாலான இடங்களில் ஆண்டு முழுவதும் அதிகம் கிடைக்கக் கூடியதாக இருப்பது சூரிய சக்தி மட்டுமே. சூரிய சக்தியை பயன்படுத்துவதால் நிலம், நீர் மற்றும் காற்று ஆகிய இயற்கை வளங்களுக்கு எந்தவித பாதிப்பும் ஏற்படுவதில்லை.

சூரிய சக்தியை சமைப்பதற்கும், வீடுகளில் ஒளியேற்றுவதற்கும், விவசாய மோட்டார்களை இயக்குவதற்கும் பயன்படுத்தலாம்.

சோலார் லாந்தர்

இந்த கையில் எடுத்துச் செல்லக் கூடிய லாந்தர்கள் பகலில் வெயிலில் வைப்பதன் மூலம் சார்ஜ் ஆகக் கூடிய பேட்டரிகளைக் கொண்டுள்ளது. அதை இரவு நேரங்களில் விளக்குகளாகப் பயன்படுத்தலாம். லாந்தர்களை சார்ஜ் செய்வதற்கு மின்சாரம் தேவையில்லை. சோலார் லாந்தர்கள் எடுத்துச் செல்லக் கூடியவை மற்றும் பயன்படுத்துவதற்கு எளிதானவை.சோலார் லாந்தர்களை வயல்களுக்கும், மாட்டுக் கொட்டகைகளுக்கும் இரவு நேரங்களில் எடுத்துச் செல்லலாம்.

இரவு நேரங்களில் குழந்தைகள் படிப்பதற்கு மிகவும் பயனுள்ளதாக இருக்கும். மண்ணெண்ணை லாந்தர்களுடன் ஒப்பிடும் போது சோலார் லாந்தர்கள் மிகவும் ஆற்றல் மிக்கவை. அது புகைப் பிரச்சனைகள் மற்றும் எரிபொருள் செலவுகளில் இருந்து தப்பிக்க உதவுகிறது.

இந்த லாந்தர்களை தமிழ்நாட்டின் தேர்ந்தெடுக்கப்பட்ட மாவட்டங்களில் தலைமை தபால் அலுவலகங்களில் இருந்து வாங்கிக் கொள்ளலாம். இந்த சோலார் லாந்தர்கள் மூன்று மாடல்களில் ஒவ்வொன்றும் முறையே ரூ. 399/-, ரூ. 549/- மற்றும் ரூ. 1699/- என்ற விலைகளில் திறனின் அடிப்படையில் கிடைக்கப் பெறுகிறது.

எங்கே வாங்குவது?

சோலார் லாந்தர்கள் புதிய மற்றும் புதுப்பிக்கத் தக்க சக்திக்கான அமைச்சகத்தின் (MNRE) ஒப்புதல் பெற்ற 'அக்ஷய ஊர்ஜா' கடைகளிலிருந்தும் வாங்கலாம். ■

(தொடரும்)

ராணி மங்கம்மமாள்

வாழ்க்கையில் பல்வேறு சோதனைகள் வந்தபோதும் அதை தைரியமாக எதிர்த்து நின்று போராடி வெற்றி கண்டவர் ராணி மங்கம்மாள். தென் மாவட்டங்களில் இன்றைக்கும் துடிப்புள்ள, சுட்டித்தனமான குழந்தைகளை 'மங்கம்மா' என்றே செல்லமாக அழைக்கின்றனர்.

கண்காணிக்கும் மக்கள் அமைப்பு...!

சமூக தணிக்கை குழு,
கத்தாளம்பட்டி கிராம வறுமை ஒழிப்பு சங்கம்,
விருதுநகர் மாவட்டம்.

கிராம வறுமை ஒழிப்பு சங்கத்தின் செயல்பாடுகளையும், நிதி சார்ந்த நடவடிக்கைகளையும் கண்காணிக்க அமைக்கப்பட்டுள்ள சமூகத் தணிக்கை குழுவின் செயல்பாடுகள் குறித்து விருதுநகர் மாவட்டம், கத்தாளம்பட்டி ஊராட்சியில் செயல்படும் கிராம வறுமை ஒழிப்பு சங்க சமூக தணிக்கைக் குழு உறுப்பினர்கள் கூறுகிறார்கள்.

சமூகத் தணிக்கை குழுவைப் பற்றி...

எங்கள் ஊரில் புதுவாழ்வு திட்ட இலக்கு மக்களின் பிரதிநிதித்துவத்துடன் ஏற்படுத்தப்பட்ட 5 உறுப்பினர்கள் கொண்ட சமூக தணிக்கை குழு, கிராம வறுமை ஒழிப்பு சங்கம் மற்றும் கிராம சபையால் அங்கீகரிக்கப்பட்ட அமைப்பாகும். சமூகத் தணிக்கை குழுவின் பொறுப்புகளை அனைவரும் பகிர்ந்து கொள்வோம்.

சமூக தணிக்கை குழுவின் செயல்பாடுகள் எவை?

கிராம வறுமை ஒழிப்பு சங்கத்தின் செயல்பாடுகளை கண்காணித்து குறைநிறைகளை கிராம சபையில் அறிக்கையாக சமர்ப்பிக்கின்றோம். கிராம வறுமை ஒழிப்பு சங்கத்தில் உள்கற்றல் நடத்தி பணியில் தொய்வுகள் இருப்பின் கால நிர்ணயம் மற்றும் பொறுப்புகளை பகிர்ந்தளித்து பிரச்சனைகளுக்கு தீர்வு காண உதவுகின்றோம். பிரச்சனைகள் வரும் முன் தடுப்பதற்கு ஆளுமை மற்றும் பொறுப்புணர்வு செயல் திட்டம் வருடத்திற்கு இரண்டு முறை நடத்தி பிரச்சனைகள் வராவண்ணம் செயல்படுகின்றோம்.

சமூகத் தணிக்கை குழுவில் இலக்கு மக்களின் பங்கு என்ன?

சமூகத் தணிக்கை குழுவின் அனைத்து செயல்பாடுகளையும் இலக்கு மக்களே திட்டமிட்டு செயல்படுத்தி கண்காணித்து மதிப்பீடும் செய்கின்றனர்.

கிராம வறுமை ஒழிப்புச் சங்கம் மற்றும் கூட்டமைப்புகள் திட்ட நிதிகள் பெறுவதற்கு இலக்குகள் முழுமையாக அடைந்ததை சரிபார்த்து கிராம சபைக்கு அறிக்கை செய்வதும் எங்கள் பணியாகும்.

திட்ட செயல்பாடுகள் திட்டத்தின் உயிர்மூச்சு கோட்பாடுகளின்படியும், விதிமுறைகளின்படியும் உரிய நேரத்தில் சரியான இலக்கு மக்களை சென்றடைகின்றதை உறுதி செய்கின்றது.

நிதி நடவடிக்கைகளுக்கு ஒப்புதல் அளிப்பது யார்?

கிராம வறுமை ஒழிப்புச் சங்க நடவடிக்கைகள் எங்களால் ஒப்புதல் அளிக்கப்பட்டே கிராம சபையில் அங்கீகாரம் பெறுகிறது. மேலும் கிராம வறுமை ஒழிப்புச் சங்கம் மற்றும் கூட்டமைப்புகள் திட்ட நிதிகள் பெறுவதற்கு இலக்குகள் முழுமையாக அடைந்ததை சரிபார்த்து கிராம சபைக்கு அறிக்கை அளிப்பதும் எங்களின் முக்கிய பணியாகும். சமூகத் தணிக்கை குழுவின் கண்காணிப்பு கிராம வறுமை ஒழிப்புச் சங்கங்களை சரியாக நடத்த உதவும் என்பது எங்கள் உறுதியான நம்பிக்கை ஆகும். ■

Published by S.CHINNAPPAN, on behalf of MUTRAM SOCIETY From TNCDW, Annai Teresa Mahalir Valagam, 1st Floor, Valluvarkottam High Road, Nungambakkam, Chennai – 600 034 (78,000 Copies circulated) an Printed by C. JEBAMANI, CANAAN PRESS PRIVATE LTD., No. 62/1, Peter's Road, Royapettah, Chennai - 600 014. Editor: S.CHINNAPPAN.

- கவுரவமான வாழ்க்கைக்கு கண்டிப்பாக கழிவறையை பயன்படுத்துங்கள்
- உடல் நலத்திற்கு கேடான நோய்க் கிருமிகள் திறந்தவெளி மலத்தால் உருவாகின்றன
- வீட்டில் கழிவறை கட்டுங்கள். அது வரை பொதுக் கழிவறைகளை பயன்படுத்துவேன் என சபதமெடுங்கள். ஏனெனில்

கழிவறை உபயோகமே, வாழ்க்கைக்கு கவுரவம்.

unicef
unite for children

வெளியில மலம் போனா சீச்சீ சொல்லப்பா!

RNI No. TNTAM/1999/02733-TAMILNADU MAKLIR MAMPATTU MURTRAM R.DIS 498 / 2012
Reg. No. TN/CH(C)/455/12-14 & Licensed to Post Under without Prepayment TN/PMG(CCR)/WPP - 564 / 2012 - 14
Date of Publication 19.02.2014

இந்தியன் வங்கி அறிமுகப்படுத்தும்
இடம் பெயர்ந்த தொழிலாளர்கள்
அலைபேசி வாயிலாக பணம் அனுப்பும் புதிய வசதி

நன்மைகள்

- பாதுகாப்பான வழிமுறை
- உடனடி பட்டுவாடா
- எளிய செயல்முறை
- கட்டணம் எதுவும் கிடையாது
- இந்தியன் வங்கி மற்றும் இதர வங்கி கணக்கிற்கும் பணம் அனுப்பும் வசதி

பணம் அனுப்ப விரும்புபவர் செய்ய வேண்டியது

- பணம் அனுப்ப விரும்புபவர் இந்தியன் வங்கியில் விதிமுறைகளுக்கு உட்பட்டு கணக்கு துவங்க வேண்டும்
- அவ்வாறு கணக்கு துவங்கியவர் வங்கியிலிருந்து அவரின் அலைபேசிக்குறிய அடையாள எண்ணை பெற்றுக் கொள்ள வேண்டும்
- பணம் அனுப்ப விரும்புபவர் ஒரு விண்ணப்பப் படிவத்தில் பணம் பெறுபவரின் கணக்கு எண், அவரின் வங்கி மற்றும் வங்கிக் கிளையின் பெயர், வங்கி கிளையின் எண் போன்ற விவரங்களை பூர்த்தி செய்து இந்தியன் வங்கியில் பதிவு செய்ய வேண்டும்.
- விண்ணப்பப்படிவத்தில் குறிப்பிட்டுள்ள பணம் பெறுபவரின் விவரங்களை இந்தியன் வங்கி பதிவு செய்து கொள்ளும்.

பணம் அனுப்ப விரும்புபவர் 9444394443 என்ற எண்ணிற்கு கீழ்கண்டவாறு குறுஞ்செய்தி (SMS) அனுப்பவேண்டும்

FT 500 1234 <அனுப்பபட வேண்டிய தொகை> < வங்கியிலிருந்து பெறப்பட்ட அடையாள எண் >

பணம் பெறுபவரின் கணக்கில் பணம் வரவானவுடன் பணம் அனுப்பியவருக்கு அதை உறுதி செய்யும் விதமாக குறுஞ்செய்தி அனுப்பபடும்.

புதுமைப்படைப்பு தொழில்நுட்ப சேவைகளுடன் முன்னோக்கிச் செல்வோம்

மேலும் விவரங்களுக்கு: அருகில் உள்ள இந்தியன் வங்கி கிளையை தொடர்பு கொள்ளவும்.

கார்பரேட் அலுவலகம்:
254-260, அவ்வை சண்முகம் சாலை,
இராயப்பேட்டை, சென்னை-600 014.
மின்னஞ்சல்: indmail@indianbank.co.in
கட்டணமில்லா தொலைபேசி: 1800 425 00 000
இணையதளம்: www.indianbank.in

इंडियन बैंक
இந்தியன் வங்கி
உங்கள் தொழில்நுட்பநேய வங்கி